# மவ்லானா ரூமியின் தத்துவங்கள்

மவ்லவீ. எஸ். அப்துல்வஹ்ஹாப் பா(ஃ)கவீ

அன்ஸார் பப்ளிஷர்ஸ்

# முன்னுரை

'சிறுவனாக இருக்கும்போது சமையும் சூழல்தான் ஒரு மனிதனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது' என்று மன இயல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இது யாருக்குப் பொருந்தினாலும் யாருக்குப் பொருந்தாவிட்டாலும், மவ்லானா ரூமிக்கு நிச்சயமாகப் பொருந்துகிறது. மிகச் சிறிய வயதிலேயே நல்ல சூழ்நிலையைப் பெற்றிருந்த அவர்கள் தம் வாணாளின் இறுதியில் மிகப் பெரும் காவியம் ஒன்றை இயற்றினார்கள். 35,000 இரண்டடிப் பாக்களைக் கொண்ட அந்தப் பெருநூல் ஞான மார்க்கத்துக்கு ஒளி விளக்காகக் காட்சியளிக்கிறது.

தந்தை வழியில் இஸ்லாத்தின் முதல் கலீஃபாவான அபூபக்கர் (ரலி) அவர்களின் சந்ததியில் தோன்றிய மவ்லானா ரூமி, தாய் வழியில் அரச பரம்பரையுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். இதனால்தானோ என்னவோ, அவர்களது தெய்வீகக் கருத்துக்களில் பெரும்பாலானவை அரசியலையொட்டியே வெளிவந்திருக் கின்றன.

இங்கு மவ்லானா ரூமியின் தந்தையைப் பற்றி இரண்டு வார்த்தை, சொல்லிவிடுவது நல்லது என்று நான் நினைக்கிறேன். மவ்லானாவின் எதிர்காலத்தை அந்த மனிதர்தாம் உருவகப்படுத்தி னார் என்று நம்புவதற்குப் போதிய இடமுண்டு. பஹாவுத்தீன் வலத் என்ற பெயருள்ள அவர் இஸ்லாத்தில் ஆழ்ந்த பற்றுதல் கொண்ட வர். அவருடைய அறிவுக்கும் திறமைக்கும் மக்கள் மதிப்புக் கொடுத்தார்கள்; 'அறிஞர்களுக்கு அரசர்' என்று பெயர் சூட்டினார் கள்.

அத்துடன், ஞான மார்க்கத்தில் அவருடைய நம்பிக்கை உறுதி யானது. 1111-ல் இறந்த இமாம் கஸ்ஸாலீயின் அடிச்சுவட்டைப் பின்பற்றிய பஹாவுத்தீன், தத்துவ விளக்கத்துக்குப் புதியதொரு வழியை அறிமுகப்படுத்தினார். சிறந்த பிரச்சாரகர் என்று மக்களால் பாராட்டப்பட்ட பஹாவுத்தீன் அந்தப் பெருமைக்குப் பெரிதும் தகுதி பெற்றிருந்தார்.

அறிஞர் பஹாவுத்தீன் மனத்தைக் கவர்ந்த நூல்களில், இமாம் கஸ்ஸாலீயின் சகோதரரான அஹமத் கஸ்ஸாலீ 'தெய்வீக அன்பு'

மஸ்னவீயின் பெருமைக்கு விளக்கம் கொடுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். பாமர மக்களின் நன்மையை உத்தேசித்து, மவ்லானாவின் கருத்துக்கள் பெரிதும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஏனெனில், மவ்லானாவின் ஆத்மீகக் கருத்துக்களை வாசகர்கள் மிக எளிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது என் ஆசை.

மவ்லானா ரூமிக்கு மட்டுமின்றி, மெய்ஞ்ஞானிகள் அனைவருக்கும் ஒரு கெட்ட பெயர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிந்தனையின் அடித்தளத்தில் தோன்றிய அனுபவங்களை அவர்கள் விளக்க முற்படும்போது அங்கு குறைபாடுகள் தோன்றுகின்றன என்றும், இதனால் வார்த்தைகளில் மறைந்திருக்கும் பொருளைத் தெரிந்து கொள்ள முடியாமற் போய்விடுகிறது என்றும் குறிப்பிடுகிறார்கள் சிலர்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அப்படியே ஏற்றுக் கொண்டு விட முடியாது. அவர்களின் கருத்துக்களை மற்றவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்தை வைத்து அவர்கள்மீது பழியைப் போடுவது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை.

ஞான நூல்களைப் படிக்கிறவர்கள் புதியதொரு கண்ணோட்டம் பெற்றிருக்க வேண்டும். அவற்றை எழுதிய ஆசிரியரின் வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களின் சிந்தனை எந்தக் கோணத்திலிருந்து இயங்கிற்று என்பதை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். இப்படி அவர்களை மனக் கண் முன்னால் நிறுத்திக் கொண்டு அவர்களின் நூல்களைப் படித்தால் நிச்சயமாகப் பாதிக் கருத்தையேனும் புரிந்து கொள்ளலாம். மறுபாதி என்னாயிற்று என்று கேட்கிறீர்களா? அது படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடியதல்ல; அனுபவித்துப் பார்க்கக் கூடியது. எனவே அதனை வார்த்தைகளால் விளக்க முடியாது. இந்தப் பகுதி எப்போதுமே சிக்கலானதுதான்.

என்றாலும் இந்தப் பகுதியையும் அவர்கள் விளக்க முற்பட்டிருக்கிறார்கள். குட்டிக் கதைகளையும் சுத்தமான உவமானங்களையும் ஆதாரமாக வைத்து தம்மால் இயன்ற அளவு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

எனவே தம் கருத்தை எப்படி விளக்கவேண்டுமோ அப்படித்தான் அவர்கள் விளக்கினார்கள். விளக்கத்தின்போது குறைபாடு தோன்றுகிறது என்றோ கருத்துக்குத் திரை போடப்படுகிறது என்றோ குறிப்பிட முடியாது.

உங்கள் கையிலிருக்கும் இந்நூல் மவ்லானாவின் கருத்துக்களைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டும் என்று நான் நம்புகிறேன். மார்க்கத்தை ஆன்மீக வழியுடன் பின்னி வைத்து அவர்கள் கூறியிருக்கும் கருத்துக்கள் தெளிவானவை மட்டுமல்ல. ஆதாரப்பூர்வமானவையும் கூட. ஆத்மீக வழியில் ஈடுபட்டிருந்த மாணாக்கர்களுக்கு மவ்லானா ரூமி கூறிய அந்த அறிவுரைகள் மனித இனத்துக்கே உயர்ந்த அறிவுரைகளாகும்.

மவ்லானாவின் கருத்துக்களை மாணாக்கர்கள் எப்படிப் புரிந்து கொண்டார்களோ அப்படியே நீங்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்த நூலை நான் அமைத்திருக்கிறேன். இது எனக்கு முழு வெற்றி கொடுக்கும் என்றும் நம்புகிறேன். இந்த வகையில் என் ஆற்றலுக்குப் பட்டவரையில் மவ்லானாவின் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். மவ்லானா கூறிய குட்டிக் கதைகளும் உவமானங்களும் தேவையின் அளவுக்கு விரிவுபடுத்தப் பட்டிருக்கின்றன.

இந்த நூலில் அடங்கியிருக்கும் பேச்சுக்களைப் பற்றிச் சிறிது எழுதினால் நல்லது என்று நினைக்கிறேன். இதில் எட்டு தலைப்புகள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூழலில் மவ்லானா ரூமியின் நெஞ்சத்திலிருந்து மாணாக்கர்களுக்கு முன்னால் உதிர்ந்தவை.

உலகமும் அதிலுள்ள பொருள்கள் அத்தனையும் ஒவ்வொரு வேலைக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பொறுப்புண்டு. இந்த விதத்தில் மனிதனுக்கும் ஒரு பொறுப்புண்டு. ''இந்தப் பொறுப்பை அவன் நிறைவேற்றிவிட்டால் போதும், வேறு எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை!'' என்று ரூமி குறிப்பிடுகிறார்கள். இந்தப் பொறுப்புக்கு விளக்கம் கொடுக்கிறது முதல் தலைப்பு; 'மறக்க முடியாத பொறுப்பு!'

இரண்டாம் தலைப்பு 'இறை வணக்கம்.' மெய்ஞ்ஞானிகளின் இறை வணக்கத்துக்கும் பாமரர்களின் இறைவணக்கத்துக்குமிடையில் பாரதூரமான வேற்றுமையுண்டு. ஏனெனில், இந்த இரண்டு சாராரும் வேறுபட்ட இரண்டு கோணங்களிலிருந்து சிந்திக்கிறார்கள். இந்த வேற்றுமை இங்கு ஆராயப்படுகிறது.

'பொருள் செறிந்த திருமறை' எனும் மூன்றாம் தலைப்பு. திருக்குர்ஆனை நம் சிந்தனைக்குக் கொண்டு வருகிறது. திருக்குர்ஆன் ஏன் அருளப்பட்டது. அதனை எப்படி ஓதவேண்டும் என்பன போன்ற பிரச்சினைகள் இங்கு விளக்கப்படுகின்றன.

குறித்து எழுதிய நூலும் ஒன்று. இந்த நூலைத்தான் அறிஞர் பஹாவுத்தீன் தம்முடைய ஆத்மீக வழிக்கு ஆதாரமாகக் கொண்டார். இதிலிருந்து அவரது சிந்தனை முன்னேற்ற வழிக்குத் திரும்பிற்று. தமது ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டி வைத்து ஒரு நூல் எழுதினார். சட்டம், தத்துவம், தெய்வீகம் அத்தனையும் அடங்கிய அந்நூல் அறிஞர் பஹாவுத்தீனுக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அந்த நூலின் பெயர் 'மஆரிஃப்' - அறிவுகள் என்று பொருள்.

இந்த நூல்தான் மவ்லானா ரூமியின் மனத்தைக் கவர்ந்து ஆத்மீகத் துறையில் திருப்பிவிட்டது.

ஹிஜ்ரி 604-ல் பல்க் என்ற ஊரில் பிறந்த ஜலாலுத்தீன் ரூமி, அரசியல் குழப்பத்தினால், மூன்றாம் வயதிலேயே தந்தையினால் வெளியூருக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். இந்தப் பிரயாணம் வருடக் கணக்கில் நீடித்தது. இந்தப் பிரயாணத்தில் தந்தையும் மைந்தனும் ஃபரீதுத்தீன் அத்தார் என்ற ஞானியைச் சந்தித்தார்கள். அப்போது ஜலாலுத்தீன் ரூமிக்கு வயது ஆறு.

ஞானி ஃபரீதுத்தீன் அத்தார் ரூமியைத் துளைத்துப் பார்த்தார். அவரது முகத்தில் மகிழ்ச்சியின் சின்னம் தெரிந்தது. ரூமியின் முகத்தில் ஆத்மீக ஒளியைக் கண்ட அத்தார், தாம் எழுதிய நூல் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார். ஞான வாழ்வு பற்றிய கவிதைகள் அடங்கிய அந்நூலின் பெயர் 'அஸ்ரார் நாமா'... மர்ம நூல் என்று அர்த்தம்.

இந்தப் பாரஸீக நூல் மவ்லானா ரூமியை மிக வன்மையாகக் கவர்ந்திருக்க வேண்டும். அதனை ஊன்றிக் கவனித்துப் படித்த ரூமி பேரின்பம் கண்டார்கள். பிற்காலத்தில் இந்த நூலில் சில பகுதிகளை அவர்கள் எடுத்து வைத்து விளக்கினார்கள். அந்த நூலை அவர்கள் பெரிதும் மதித்தார்கள் என்ற உண்மை அவர்கள் பேசிய பேச்சுக்களில் நன்றாகத் தெரிகிறது.

நிஷாபூரில் அத்தாரைச் சந்தித்த தந்தையும் மைந்தனும் அங்கிருந்து பக்தாத், மக்கா, திமஷ்க் முதலான பகுதிகளுக்கெல்லாம் சென்றார்கள். இந்தப் பிரயாணம் மவ்லானாவின் மனப்பரப்பில் நிச்சயமாக அறிவைத் திணித்திருக்கும். அறிஞர்களில் பெரும்பாலோர் அலைந்து திரிந்து ஆராய்ந்தவர்களே.

இப்படித் தொடர்ந்து பிரயாணம் செய்த அவர்கள் லாரந்தா என்ற ஊருக்கு வந்தார்கள். இந்த ஊர் குனியா எனும் ஊரிலிருந்து 35 மைல் தொலைவில் இருக்கிறது. இங்குதான் மவ்லானாவுக்கு கவ்ஹர் காதுன் என்ற பெண்ணை மணம் முடித்து வைத்தார் தந்தையார். அப்போது மவ்லானா ரூமியின் வயது 18. இந்தத் தம்பதிகளுக்குப் பிறந்த ஆண் குழந்தை சுல்தான் வலத் என்று அழைக்கப்பட்டது.

இதையொட்டி அறிஞர் பஹாவுத்தீன் குனியா எனும் ஊரில் ஞானாசிரியராக நியமிக்கப்பட்டார். ஹிஜ்ரி 628-ல் தந்தையார் இறந்ததும், அந்தப் பதவியை மவ்லானா ரூமி ஏற்றுக் கொண்டார்கள். இந்த இடத்தில்தான் மவ்லானா ரூமியின் ஆத்மீக உணர்வுக்குப் புதுத் திருப்பம் தோன்றிற்று. அதற்குக் காரணமாக இருந்தவர் ஷம்சுத்தீன் திப்ரீஸி.

திப்ரீஸியை மவ்லானா ரூமி பெரிதும் மதித்தார்கள். குறிக்கோளில்லாத தமது நீண்ட பிரயாணத்தின் நடுவே குனியாவுக்கு வந்திருந்த திப்ரீஸி, மவ்லானாவின் மனத்தில் தமது முத்திரையை ஆழமாகப் பதித்து விட்டார். அவருக்குத் தனிப்பட்ட முறையில் எந்த இடமும் சொந்தமாகக் கிடையாது. அவர் எங்கு போகிறார், எங்கிருந்து வருகிறார் என்று யாருக்கும் தெரியாது. திடீரென்று குனியாவுக்கு வந்து ரூமியைப் பார்ப்பார்; விலை கணிக்க முடியாத தத்துவங்களைப் பிரதிபலன் எதிர்பார்க்காமல் கூறுவார்; யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மறைந்து போய்விடுவார். எனவே அவருக்கு 'மர்ம ஞானி' என்று பெயர் கொடுக்கப்பட்டது.

மவ்லானாவுக்கும் திப்ரீஸிக்கும், நடந்த உரையாடல் புதியதொரு மாறுதலுக்கு வித்திட்டது. இதனால் இஸ்லாமிய சட்டங்களில் ரூமிக்கு இருந்த பற்றுதல் குறைந்தது; ஆத்மீகத்தில் இருந்த பற்றுதல் வளர்ந்தது. ஆத்மீகத் துறைக்குத் தம்மையே அர்ப்பணித்து விடும் எண்ணத்துடன் மவ்லானா ரூமி செயல்பட்டார்கள். தெய்வீக சிந்தனையில் கிடைக்கும் இன்பத்துக்கு விளக்கம் கொடுப்பது போல், தனிப்பட்ட இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார்கள்.

இந்தக் கட்டத்தில்தான் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக 'மஸ்னவி'யை எழுதினார்கள். தம் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்குக் குட்டிக் கதைகளைப் பயன்படுத்தினார்கள்; தெளிவான உவமானங்களைப் பொறுக்கிச் சேர்த்தார்கள். மஸ்னவி என்ற அந்த ஆத்மீகக் கவிதைத் தொகுப்பு சிறுகச் சிறுக வளர்ந்து கொண்டிருந்த அதே நேரத்தில், அவர்கள் தம் மாணாக்கர்களிடம் தெளிவாக உரையாடினார்கள். எனவே அந்தப் பேச்சுக்கள் மஸ்னவியின் சாரமாக அமைந்தன.

இப்படி மவ்லானா ரூமி பேசிய பேச்சுக்களில் ஒரு சிறு பகுதியை ஆதாரமாகக் கொண்டு தமிழுக்கு வந்திருக்கும் இந்நூல்,

மெய்ஞ்ஞானிகள் இறைவனைப் பேரழகன் என்று குறிப்பிடுகி றார்கள். ஏனெனில் அவனுடைய படைப்புகளில் அவனது அழகை அவர்கள் பார்க்கிறார்கள். லைலா மீது மஜ்னூன் கொண்டிருந்த காதலை அடிப்படையாக வைத்து இந்தத் தத்துவம் விளக்கப்படுகி றது. இது நான்காம் தலைப்பு: 'அன்பும் அழகும்.'

'வார்த்தையற்ற பேச்சு' எனும் ஐந்தாம் தலைப்பு. வாய் திறக்காமல் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் மானசுத் தந்தியை விளக்குகிறது. இந்தக் கலையில் மற்ற யாரையும் விட மெய்ஞ்ஞானி கள் உயர்ந்து நிற்கிறார்கள்.

'உலக மதங்கள்' என்பது ஆறாம் தலைப்பு. உலகத்திலுள்ள மதங்களிடையே சில்லரைப் பிரச்சினைகளில் காணப்படும் வேற்று மையை மையமாக வைத்து இங்கு மவ்லானா ரூமி பேசுகிறார்கள்.

ஏழாம் தலைப்பு, 'வெளித் தோற்றம்' இம்மையை வெளித் தோற்றம் என்றும் மறுமையை உட்பொருள் என்றும் சுட்டிக்காட் டும் மவ்லானா ரூமி, இந்த இரண்டுக்கும் விளக்கம் கொடுக்கிறார் கள்.

'ஸூஃபி' எனப்படும் ஞானி; இது இறுதித் தலைப்பு. மெய்ஞ்ஞானிகளின் சிந்தனை எப்படி இயங்கிற்று. அது எத்தகைய விளைவை உண்டாக்கிற்று என்பதை மவ்லானா ரூமி இங்கு ஆராய்கிறார்கள்.

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமியின் தத்துவத் தொடரில் முதல் நூல் என்ற முறையில் இதனை உங்கள் முன் வைப்பது பயனை உருவாக்குமாறு எல்லாம் வல்ல நாயனை வேண்டுகிறேன். அவன் எங்கும் நிறைந்தவன்; எதையும் பார்ப்பவன்; பிரார்த்தனைகளைக் கேட்பவன்.

*நாகூர்,*
*1.11.72*

**எஸ். அப்துல் வஹ்ஹாப்.**

# மறக்க முடியாத பொறுப்பு

எதிரில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் மவ்லானா ரூமியை ஏறிட்டுப் பார்த்தார். மறந்துபோன ஒன்றை நினைவு படுத்திக் கொள்ள முனைபவர்போல் அவர் காணப்பட்டார்.

''ஏதோ ஒன்றை நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது மறந்து போய்விட்டது...'' என்றார் இலேசான அசட்டுச் சிரிப்புடன்.

மவ்லானா ரூமியின் முகத்தில் புன்னகை நெளிந்தது. நெற்றியில் சிந்தனைக் கோடுகள் முத்திரை பதித்தன. ''என்ன சொன்னீர்கள்? நீங்கள் நினைத்துக் கொண்டிருந்த ஒன்று மறந்துபோய் விட்டதா? அது தானாகவே உங்கள் நெஞ்சத்திலி ருந்து மறைந்து போயிருக்க முடியாது. அதை நீங்கள்தாம் மறந்துவிட்டீர்கள். நீங்கள் எதை மறந்தாலும் எதை மறக்கா விட்டாலும், ஒரே ஒரு காரியத்தை மட்டும் நீங்கள் என்றைக் கும் மறந்துவிடக் கூடாது. அது மறக்கமுடியாத பொறுப்பு!'' என்று கூறிய ரூமி, தமது சிந்தனையை நண்பருக்குக் காட்டுகிறார்கள்.

மனிதனின் நினைவாற்றலும் மறதியும் சர்வசாதாரணமா னவை. ஒரு சமயம் நினைவாற்றல் பயன்பட்டால், வேறொரு சமயம் மறதி பயன்படுகிறது. மொத்தத்தில், இந்த இரண்டும் மனிதனுக்குப் பயன்படக்கூடியவைதாம். அவன் எத்த னையோ காரியங்களை மனதில் வைத்துச் செயலாற்றுகிறான். அவற்றில் அவனுக்கு அக்கறையுண்டு. அக்கறையும் பொறுப் புமுள்ள காரியங்கள் எளிதில் மறக்கப்படுவதில்லை. இன்னும் எத்தனையோ காரியங்களை அவன் மறந்துவிட்டுப் பொறுப் பின்றி அலைந்து திரிகிறான். இவற்றில் அவனுக்கு அக்கறை கிடையாது. அக்கறையில்லாத காரியம் மனிதனின் நினைவிலி ருந்து நழுவிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அவன் எதை மறந்தாலும் எதை மறக்காவிட்டா லும் ஒரேயொரு பொறுப்பை அவன் என்றைக்கும் மறந்துவி டக் கூடாது. உலகில் தோன்றியிருக்கும் மனிதர்கள் அனை வருக்கும் இப்படியொரு பொறுப்புண்டு. அந்தப் பொறுப்பை அவன் என்றைக்கும் மறக்கக் கூடாது. அதைத் தவிர்த்து வேறு எதை மறந்தாலும் பரவாயில்லை.

இதுமாதிரி உங்களுக்கும் ஒரு பொறுப்புண்டு. அந்தப் பொறுப்பை மறக்காமல் செயல்படுத்தும் நீங்கள், மற்ற அனைத்தையும் மறந்து விட்டீர்கள் என்றே வைத்துக் கொள் வோம். நீங்கள் பாராட்டுக்குரியவர்தாம். உங்கள் மீது யாரா லும் குற்றம் சாட்ட முடியாது. நீங்கள் கவலைப்பட வேண்டிய தேவையேயில்லை. ஏனெனில், உங்களுக்கென்றே நிர்ணயிக் கப்பட்டிருக்கும் பொறுப்பில் நீங்கள் குறை வைக்கவில்லை.

இப்போது வேறொரு கோணத்திலிருந்து பிரச்சினையை ஆராய்வோம். உலக வாழ்வில் நீங்கள், பல சாதனைகள் புரிந்திருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நிறைவேற் றிய பொறுப்புக்கள் எண்ணிக்கையில் உயர்ந்து கொண்டிருக் கின்றன. புகழும் பாராட்டும் உங்களுக்கு முன்னால் குவிந்து கொண்டிருக்கின்றன. உங்களை வெற்றி வீரர் என்று மக்கள் பாராட்டுகிறார்கள்; செயல் திறன் பெற்றவர் என்று குறிப்பிடு கிறார்கள்.

இந்தக் கட்டத்தில், அந்த ஒரேயொரு பொறுப்பை நீங்கள் மறந்து விட்டீர்கள் என்றால், உங்களை வெற்றி வீரர் என்றும் சொல்ல முடியாது; செயல் திறன் பெற்றவர் என்றும் குறிப்பிட முடியாது. மக்களின் பாராட்டுரையில் பொருள் கிடையாது. உங்களுக்கு முன்னால் குவிந்திருக்கும் பாராட்டுக் குவியல் உங்களுக்குப் பயன்படாது. உண்மையில் நீங்கள் எந்தச் சாதனையும் புரிந்ததாகப் பெருமைப்பட முடியாது. ஏனெனில் உங்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பொறுப்பில் நீங்கள் குறை வைத்து விட்டீர்கள்; இதனை மறந்து விட்டீர்கள்.

இதனை இன்னும் தெளிவாக நீங்கள் உணர்ந்து கொள்ள விரும்பினால் ஓர் உவமானத்தை எடுத்துக் கொள்வோம்.



சக்தி வாய்ந்த அரசன் ஒருவன், குறிப்பிட்ட ஒரு வேலைக்காக உங்களைத் தன் பிரதிநிதியாக அனுப்புகிறான். அதன்படி, அவனுடைய ஆட்சிக்குட்பட்டிருக்கும் கிராமம் ஒன்றுக்கு நீங்கள் வருகிறீர்கள். அந்த அரசன் உங்களை எதற்காக இங்கு அனுப்பியிருக்கிறான் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். எந்த வேலையைச் செய்து முடிப்பதற்காக அவன் உங்களை அனுப்புகிறானோ, அந்த வேலையை நீங்கள் செய்தே தீர வேண்டும். அது மறக்க முடியாத பொறுப்பு. மற்ற எதையும்விட இது முந்தியது; உடனடியாகக் கவனிக்கப் பட வேண்டியது.

இந்தக் கட்டத்தில், வந்த வேலையை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நீங்கள் திரும்பிச் சென்றுவிட்டால், உங்கள் மீது அந்த அரசனால் குறை சொல்ல முடியாது. அவனுடைய கட்டளைக்கு அப்பாற்பட்ட வேலைகளை நீங்கள் செய்யவில்லை என்ற காரணத்தை வைத்து உங்களை அவனால் தண்டிக்க முடியாது. ஏனெனில், எந்த வேலைக்காக நீங்கள் அனுப்பப்பட்டீர்களோ அந்த வேலையை வெற்றிகர மாக முடித்துக் கொடுத்துவிட்டீர்கள். மறக்க முடியாத அந்தப் பொறுப்பை நீங்கள் மறக்கவில்லை; முறைப்படி செயல்படுத் திக் காட்டிவிட்டீர்கள்.

அரசனின் கட்டளைப்படி அந்தக் கிராமத்திற்குச் சென்ற நீங்கள், அவனுடைய கட்டளையை மறந்துவிட்டு, அவன் குறிப்பிடாத பல வேலைகளைச் செய்து முடிக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தச் சூழலில் அரசனின் திருப் தியை உங்களால் நிச்சயமாகப் பெறமுடியாது. ஏனெனில், எந்த வேலைக்காக உங்களை அவன் அனுப்பினானோ, அந்த வேலையை நீங்கள் மறந்து விட்டீர்கள். அதற்கு அப்பாலுள்ள வேலைகள் நீங்கள் செய்வதும் செய்யாதிருப்பதும் ஒன்றுதான்.

இப்படிப் பார்க்கும்போது, அரசனின் பிரதிநிதியாகக் கிராமத்திற்கு சென்ற நீங்கள் எதையுமே செய்யவில்லை என்று பொருள் கொள்ள வேண்டிய தேற்படுகிறது. அவன் உங்கள் தலையில் சுமத்திய பொறுப்பை மறந்து விட்டீர்கள் என்ற ஒரே காரணத்தை வைத்து உங்களைத் தண்டித்தாலும்

ஆச்சரியப் படுவதற்கில்லை. அப்போது அந்தத் தண்டனையை நீங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

''நான் உன்னிடம் ஒப்படைத்த பொறுப்பு என்னாயிற்று?'' என்று அவன் கேட்கும்போது, ''அரசர் பிரான் குறிப்பிட்ட வேலையை அடியேன் மறந்து விட்டாலும், அவர் குறிப்பிடாத பல வேலைகளைச் செய்து முடித்திருக்கிறேன்'' என்று உங்களால் வாதாட முடியாது. 'ஏன்?' என்று கேட்கிறீர்களா? அரசனின் கட்டளையை நிறைவேற்றுவது உங்களுக்குக் கடமை. அந்தக் கடமைக்கு அப்பாற்பட்டதை நீங்கள் செய்வதும் செய்யாதிருப்பதும் ஒன்றுதான். அதே வேளையில் அரசனின் கட்டளையை மறந்து நீங்கள் செய்த பெரும் குற்றம்.

அரசனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காகக் கிராமத்திற்கு வந்த பிரதிநிதியைப் போல், இறைவனின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக மனிதன் உலகத்திற்கு வந்திருக்கிறான். மனிதனுக்கு இறைவன் கொடுத்திருப்பது மகத்தானதொரு பொறுப்பு. அதனை அவன் என்றைக்கும் மறக்கக் கூடாது. அதனை மனதில் வைத்து முறைப்படி செயலாற்ற வேண்டியது அவனுக்குக் கடமை. இந்தக் கடமையை அவன் குறைவின்றி நிறைவேற்றிவிட்டால் போதும்; வேறு எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. இதில் அவன் குறை வைத்தால், அவனுக்குக் கிடைக்கும் தண்டனையில் மற்றவர்கள் பங்குபெற மாட்டார்கள்.

அந்தப் பொறுப்பை இறைவன் திருக்குர்ஆனில் இப்படிச் சுட்டிக்காட்டுகிறான்:

'விண்ணகங்களுக்கும் மண்ணகத்துக்கும் மலைகளுக்கும் நாம் அந்தப் பொறுப்பை எடுத்துக் காட்டினோம். அவை அதனைச் சுமக்க மறுத்துவிட்டன; அதனை எண்ணி நடுங்கின. அதனை மனிதன் ஏற்றுக் கொண்டான். நிச்சயமாக அவன் அறியாமையால் தனக்குத் தானே தீங்கிழைத்துக் கொண்டான்.''



விண்ணும் மண்ணும் மலைகளும், ஏற்றுக் கொள்ளத் துணியாத அந்தப் பொறுப்பு எது? இறைவன் எடுத்துக் காட்டிய அந்தப் பொறுப்பு அத்துணை பெரியதா? இங்கு நீங்கள் ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும்.

இந்த இறை வசனத்தில் விண்ணகம், மண்ணகம், மலை ஆகிய மூன்றும் வரிசையாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இறைவன் எடுத்துக்காட்டிய பொறுப்பைப் பார்த்து அவை நடுங்கின என்பது கருத்து. அந்தப் பொறுப்பைக் கண்டு அவை நடுங்கின என்பது உண்மைதான். அதற்காக அவற்றிற்கு வேறு எந்தப் பொறுப்பும் கிடையாது என்று சொல்லிவிட முடியாது.

உண்மையில் இந்த மூன்றும் பொறுப்புள்ளவைதாம். அவை தம் பொறுப்புகளை வினாடி தவறாமல் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இறைவன் எடுத்துக்காட்டிய அந்த மகத்தான பொறுப்பை அவை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவற்றிற்கென்று தனிப்பட்ட பல பொறுப்புகள் இருக்கின்றன. தம் பொறுப்புகளை குறைவின்றி நிறைவேற்றும் வழியில் அவை புரியும் சாதனைகள் எண்ணற்றவை. அவற்றை எண்ணிப் பார்க்கும் போது மனிதனின் சிந்தனை திகைத்து நிற்கிறது. அவனுடைய பகுத்தறிவு தன் இயலாமையை வெளியில் காட்டுகிறது.

விண்ணகத்தில் சூரியன், சந்திரன் முதலான எண்ணற்ற கோளங்கள் பிடிப்பின்றி மிதக்கின்றன. அவை தமது ஆற்றலை இடைவிடாது மண்ணகத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் துணை கொண்டு கரித்துண்டுகள் வைரக் கற்களாக உருவெடுக்கின்றன; காய்ந்து போன வித்துக்கள் கனிதரும் மரங்களாகப் பரிணமிக்கின்றன. பஞ்சுப் பொதிகளைப் போல் விண்வெளியில் மிதந்து செல்லும் கார்முகிற் கூட்டம் வறண்டுபோன நிலப்பரப்புக்கு நீர் தெளிக்கிறது. இரவு வேளையில் அண்ணாந்து பார்க்கிறவர்களுக்குத் தம் அழகைக் காட்டிச் சிரிக்கும் விண்மீன்கள், மண்ணில் முளைவிடும் புற்பூண்டுகள் அத்தனைக்கும் தம்மால் இயன்ற உதவி

யைச் செய்கின்றன. பகல் நேரத்தைச் சூரியன் ஒளிமயமாக்கி னால், இரவு நேரத்தைச் சந்திரன் அமைதி மயமாக்குகிறது.... விண்ணகம் நிறைவேற்றும் பொறுப்புகளில் இது ஒரு பகுதி.

மண்ணகத்தில் பொதிந்து கிடக்கும் மர்மங்களும் சாதார ணமானவையல்ல. எத்தனை தங்கச் சுரங்கங்களை அது தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது! எத்தனை நீரூற்று களை... எத்தனை செல்வக் குவியல்களை அது யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருக்கிறது! கடினமான பாறைக ளுக்கு மத்தியிலிருந்து அது குளிர் நீரை வெளியில் கொண்டு வருகிறது. இதனால், பாலையாகக் கிடக்கும் மண்தரை சோலையாக மாறுகிறது; பயனற்ற வரப்பு நிலங்கள் பயன்த ரும் தோட்டங்களாகத் திரும்புகின்றன. இதுபோன்று உலகில் உருப்பெறும் காரியங்கள் எண்ணற்றவை. இந்த வகையில் உலகம் செய்திருக்கும் சாதனைகள் பலகோடி.

மலையும் இத்தகையதுதான். அது ஏற்றுக் கொண்டிருக் கும் பொறுப்புகளையும் நம்மால் அலட்சியம் செய்துவிட முடியாது. மண்ணகத்தில் அது ஒரு பகுதிதான் என்றாலும், மற்ற இடங்களில் காணமுடியாத அற்புதச் சாதனைகளை மலைகளுக்கடியில் நீங்கள் நிச்சயம் காணலாம். எனவே விண்ணையும் மண்ணையும் போல், மலைகளும் தமது பொறுப்பைக் குறைவின்றி நிறைவேற்றுகின்றன. அதாவது... அவை எந்த வேலைக்காகப் படைக்கப்பட்டனவோ அந்த வேலையில் அவை குறை வைப்பதில்லை. இப்படி விண் ணும் மண்ணும் மலைகளும் பல்லாயிரம் வேலைகளைச் செய்கின்றன.

ஆனால், அவை செய்யும், வேலைகள் எத்தனை ஆயிரம் இருந்தாலும், ஒரே ஒரு வேலையை மட்டும் அவை செய்வ தில்லை. ஏனெனில் அந்த வேலையை அவை ஏற்க மறுத்து விட்டன; அதனைப் பார்த்து நடுங்கின. அவை செய்யத் துணியாத வேலையை மனிதன் ஏற்றுக் கொண்டான். எனவே, அவற்றிற்கு கிடைக்காத பெருமை அவனுக்குக் கிடைக்கிறது.

இந்தத் தத்துவத்தை இறைவன் இப்படிக் குறிப்பிடுகி றான்: ''ஆதமுடைய சந்ததியினரை நாம் கண்ணியப்படுத்தி



னோம்!''... ஆதமுடைய சந்ததியினர் என்றால் மனித இனம் என்று பொருள். இப்படித்தான் இறைவன் குறிப்பிடுகிறானே தவிர, ''விண்ணையும் மண்ணையும் நாம் கண்ணியப்படுத்தி னோம்'' என்றோ, ''மலைகளையும் கடல்களையும் நாம் கண்ணியப்படுத்தினோம்'' என்றோ குறிப்பிடவில்லை.

விண்ணகம், மண்ணகம், மலைகள், கடல்கள் முதலி யவை நிறைவேற்றாத ஒரு பொறுப்பு மனிதனுக்காகக் காத்திருக்கிறது. அந்தப் பொறுப்பை அவன்தான் ஏற்றுச் செயலாற்ற வேண்டும். அதனை அவன் முறைப்படி நிறை வேற்றிவிட்டால் அவனுக்குப் பெருமையும் பாராட்டும் கிடைக்கும். அதில் அவன் குறை வைத்தால், 'நேர்மையிழந்த வன்' ... 'அறியாதவன்' எனும் நிந்தனை வந்து சேரும்.

''அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றாவிட்டாலும் எத்தனையோ பொறுப்புகளைத் தாங்கிச் செயல்படுத்துகின் றேனே!'' என்று உங்களால் வாதாட முடியாது. ஏனெனில் அது தவிர்க்க முடியாத பொறுப்பு. அதைத் தவிர்த்து வேறு எந்தப் பொறுப்புக்காகவும் நீங்கள் படைக்கப்படவில்லை. எனவே அந்த ஒரு பொறுப்பு முக்கியமானது. மற்ற அனைத் தும் இரண்டாம் தரத்தவை. மறக்கமுடியாத அந்த ஒரே பொறுப்புக்காகத்தான் இறைவன் உங்களை மனிதராகப் படைத்திருக்கிறான்.

விலையுயர்ந்த இந்தியப் போர்வாள் ஒன்றை உங்களிடம் ஒப்படைத்த உங்கள் அதிகாரி ஒருவன், ''இதை நீ நன்கு பேணிக் காக்க வேண்டும். இதை வீணாக்கிவிடக் கூடாது. இதுபோன்ற பொருள்களை அரசர்களின் அந்தரங்க கஜானா வில்தான் காண முடியும்!'' என்று கூறுகிறான். அதைப் பாதுகாத்து வைக்கவேண்டியது உங்கள் கடமையல்லவா? நீங்கள் நம்பிக்கைக்குரியவராயிருந்தால் அதைப் பாதுகாத்துத் தானே ஆகவேண்டும்? நீங்கள் அப்படிச் செய்யாமல், அந்த வாளைத் துண்டு துண்டாக உடைத்து, இறைச்சி வெட்டக்கூ டிய கத்திகள் தயாரித்துக் கொண்டால், உங்களை நாணயமுள் ளவரென்று சொல்ல முடியுமா? அந்த அதிகாரியின் அன்பைத்

தான் உங்களால் பெறமுடியுமா? அல்லது உங்கள் செயலுக்குத் தான் உங்களால் காரணம் காட்ட முடியுமா?

''நான் உன்னிடம் ஒப்படைத்திருந்த கத்தியை பாதுகாத்து வைத்தாயா?'' என்று அந்த அதிகாரி கேட்கும்போது, ''இல்லை - அந்த வாளை நான் பாதுகாத்து வைக்கவில்லை. என்றாலும் அதிலிருந்து சமையற்கட்டுக்குத் தேவையான சாமான்களைச் செய்து கொண்டேன்'' என்று உங்களால் வாதாட முடியுமா? இறைச்சி நறுக்கக் கூடிய கத்தி சாதாரண மானது. அதை அற்ப விலைக்கு எங்கும் வாங்கலாம். ஆனால் அந்த அதிகாரி ஒப்படைத்திருந்த இந்திய வாள் அபூர்வமா னது; அதனை எளிதில் அடைய முடியாது. கடை வீதியில் குவித்து விற்பனை செய்யப்படும் பொருள்களில் ஒன்றல்ல அது. அற்பப் பொருளுக்காக அரிய பொருளை வீணாக்குவது அறியாமை மட்டுமல்ல, அநியாயமும் கூட.

இது உங்களுக்குப் புரியவில்லை என்றால், மற்றோர் உவமானத்தை எடுத்துக் கொள்வோம். பொருட்காட்சியில் வைக்கவேண்டிய அற்புதமான தங்கப் பாத்திரம் ஒன்று உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்று வைத்துக் கொள் வோம். அதனைப் பாதுகாத்து வைக்காத நீங்கள் அதனைச் சோறு சமைக்கும் பானையாகப் பயன்படுத்திக் கொண்டால் உங்கள் செயலை யாரேனும் பாராட்டுவார்களா? அல்லது உங்கள் செயலுக்குத்தான் உங்களால் பாராட்டை எதிர்பார்க்க முடியுமா? வைரமாலையை நாயின் கழுத்தில் அணிவிப்பது எப்படித் தவறோ, அப்படியே தங்கப் பாத்திரத்தைச் சோற்றுப் பானையாகப் பயன்படுத்துவதும் தவறு.

எனவே மனிதன் மிக உயர்ந்தவன். விண்ணகம், விண் மீன்கள், மண்ணகம், மலைகள் முதலிய அனைத்தையும் விட மேலானவன். அவனுக்கு இருக்கும் பொறுப்பும் மற்ற அனைத்துக்கும் இருக்கும் பொறுப்பை விடக் கடினமானது. இந்த உண்மையை நீங்கள் என்றைக்கும் மறந்துவிடக் கூடாது.

மனிதனின் சிறப்பை கவிஞர் ஒருவர் இப்படிக் குறிப்பிடு கிறார். ''விண்ணையும் மண்ணையும் விட நீ பெரிதும்



உயர்ந்தவன். இதைவிட வேறு என்ன வேண்டும்? உன்னு டைய மதிப்பு உனக்கே தெரியவில்லையே! அற்பப் பொருள்க ளுக்காக உன்னுடைய மதிப்பை விலைபேசி விற்றுவிடாதே. இறைவனின் பார்வையில் நீ மிக உயர்ந்த நிலையில் இருக்கிறாய்.''

உடலும் உள்ளமும் உயிரும் பெற்று உலகத்திற்கு வந்திருக்கும் மனிதன், தன்னுடைய பொறுப்புகளில் ஒரு சிறு பகுதியையே நிறைவேற்றுகிறான். தன் உடலை அவன் எப்படி வளர்க்கிறானோ அப்படித் தன் உள்ளத்தை வளர்ப்ப தில்லை. வேளை தவறாமல் உடலைப் பாதுகாக்கும் அவன், தன் உயிரைப் பற்றி நினைத்துப் பார்ப்பதேயில்லை. ''உள் ளத்தை வளர்க்க வேண்டும்'' என்னும் இறைக் கட்டளையை அவன் புறக்கணித்து விட்டான். தன்னைத் தானே உணர்ந்து, தனியோன் வகுத்த வழியில் முன்னேற வேண்டிய பொறுப்பை மறந்தது அவன் செய்த தவறு. இதற்கு மன்னிப் புப் பெறுவது அரிது.

இதைப்பற்றி நாம் அவனிடம் கேட்டால், ''என்னை நான் வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். என் அறிவு ஒவ் வொரு நாளும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது'' என்று வாதாடுகிறான்.

அவன் மீண்டும் கூறுகிறான்: நான் மகத்தான பல பொறுப்புகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். சட்டம், தத்துவம், தர்க்கஞானம், வான இயல், வைத்தியம் முதலான அறிவுகள் அனைத்தையும், நான் கரைத்துக் குடித்துக் கொண்டி ருக்கிறேன். எனவே, நான் ஈடுபட்டிருக்கும் வேலை சிறப்பு மிக்கது. நான் ஏற்றிருக்கும் பொறுப்பு பாராட்டுக் குரியது.''

அவன் அறிவுத் துறையில் எவ்வளவு ஆழமாக வேண்டு மானாலும் பிரவேசிக்கட்டும். தனது நேரம் முழுவதையும் இந்த வழியில் அவன் செலவிடுகிறானா? தாராளமாகச் செலவி டட்டும்.

ஆனால், இதையெல்லாம் அவன் யாருக்காகச் செய்கி றான்? அவனைப் படைத்துப் பொறுப்பைக் கொடுத்து

உலகிற்கு அனுப்பிய இறைவனுக்காகவா அவன் இப்படிச் செய்கிறான்? இல்லை... நிச்சயமாகக் கிடையாது.

தனக்காகவே அவன் அனைத்தையும் செய்கிறான்; தன் னலத்தை அடிப்படையாக வைத்தே அவன் அறிவுகளை அள்ளுகிறான். 'அவனுக்கு இறைவன் கொடுத்த பொறுப்பு என்னாயிற்று?' என்று கேட்கிறீர்களா? அதைப் பற்றித்தான் அவன் கவலைப்படவேயில்லையே! எனவே அந்தப் பொறுப்பு மண்ணாயிற்று!

சட்டத்தை எடுத்துக் கொண்டால், அது அவனுடைய நன்மைக்குப் பயன்படுகிறது என்பதற்கு ஆதாரம் தேவை யில்லை. தன் உடைமைகளையும் உரிமைகளையும் பாதுகாத் துக் கொள்வதற்குச் சட்டம் உபயோகிக்கப்படுகிறது. அவன் கையிலிருப்பதை யாரும் தொட முடியாது. அவன் அணிந்தி ருக்கும் துணியை யாராலும் பிடுங்க முடியாது. இப்படியெல் லாம் அவன் சட்டத்தை வைத்துத் தன்னலத்தை வளர்த்துக் கொள்கிறான்.

தத்துவத்தையும் தர்க்க ஞானத்தையும் வைத்து அவன் மற்றவர்களின் வாய்க்குப் பூட்டும் போடுகிறான். மற்றவர் களை விடத் தன்னை உயர்த்திக் காட்டுவதற்கு இந்த அறிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே இங்கும் தன்னலமே தனித்து நிற்கிறது.

வான இயலை எடுத்துக் கொண்டால், அதிலிருக்கும் தன்னலம் தெளிவாகத் தெரிகிறது. விண்மீன்களில் அதிர்ஷ்டம் வாய்ந்தது எது, பீடை பிடித்தது எது என்று கணக்குப் போடும் அவன் தனக்கு ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முற்படுகிறான்.

மொத்தத்தில், அவன் செய்யும் காரியங்கள் எல்லாம் தன்னலம் எனும் குறுகிய வட்டத்திற்குள்ளேயே அடங்கிப் போய்விடுகின்றன.

உயிரும் உள்ளமும் இல்லாத வெற்றுடலுக்கு 'மனிதன்' என்று பெயரிட முடியாது. உடல், உள்ளம், உயிர் ஆகிய மூன்றும் சேரும்போதுதான் மனிதன் எனும் பெயர் உருவாகி



றது. இப்படியிருக்க தன் உடலைக் கவனிக்கும் மனிதன் உயிரையும் உள்ளத்தையும் ஏன் மறந்து விடுகிறான்? இப்படி மறப்பதைத்தான் அவன் மறக்க முடியாத பொறுப்பு என்று நினைக்கிறானோ என்னவோ! அவன் தாராளமாக அறிவைத் தேடட்டும். ஆனால் அதற்காக அனைத்துக்கும் மூலமான இறைவனை மறந்துவிட வேண்டுமா? அவன் தாராளமாக உடலைக் கவனிக்கட்டும். ஆனால் அதற்காக உள்ளத்தையும் உயிரையும் கட்டோடு புறக்கணித்து விடவேண்டுமா?

உலகில் வாழ்கிறவர்களுக்கு உணவும் உறக்கமும் தேவை. இதில் யாருக்கும் விதிவிலக்கில்லை. இவை உள் ளத்தை விட உடலுக்குத்தான் அதிகமாகப் பயன்படுகின்றன. இந்த இன்பத்தில் திருப்தி காண்கிறவர்கள் பலர். ஆனால் உங்களுக்கு இந்த இரண்டையும் தவிர்த்து வேறோர் உணவு உண்டு. அது உங்கள் உடலுக்கு நேரடியாகப் பயன்படாவிட் டாலும், உள்ளத்துக்கு நிச்சயம் பயன்படும். உங்கள் உடலுக்கு எது உணவாக இருக்கிறதோ, அது உங்கள் உள்ளத்துக்கு உணவாக இருக்க முடியாது. குதிரைக்கு உணவாகப் பயன் படும் ஒன்று, குதிரை வீரனுக்கு உணவாகப் பயன்படமுடி யாது. குதிரை வீரன் கண்ணை மூடிக் கொண்டிருந்தால், அவனை அந்தக் குதிரை எதிர்த் திசையில் இழுத்துச் சென்றுவி டும்.

அப்படித்தான் மஜ்னூன் ஏறிச் சென்ற ஒட்டகம் எதிர்த் திசையில் பிரவேசித்தது. லைலாவை நினைத்துக் கொண்டு அவன் ஒட்டகத்தில் ஏறி உட்கார்ந்தான். லைலாவின் எண்ணத் தில் அவன் கரைந்து கொண்டிருந்தான். அவளைத் தவிர்த்து அவனுக்கு வேறு எந்த எண்ணமும் கிடையாது. தன் ஒட்டகம் லைலாவின் வீட்டை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது என்று நினைத்த மஜ்னூன் திடீரென்று உணர்வு பெற்றான். இப்போது அவனுக்கு உண்மை தெரிந்தது. அவன் ஒட்டகம் லைலாவின் வீட்டுக்குச் செல்லவில்லை. அது லைலாவின் வீட்டைவிட்டு வெகுதூரம் அகன்று வந்து விட்டது. ஏனெ னில் அந்த ஒட்டகத்திற்கு லைலா மீது காதல் கிடையாது.

எனவே மஜ்னூன் புலம்பியழுதான்; ''இந்த ஒட்டகம் என் இலட்சியத்தைக் குலைக்கிறது. என் ஒட்டகத்தின் ஆசை என் ஆசைக்குப் பின்னாலுள்ளது. அது தன் விருப்பப்படி நடந்து கொண்டால், என் விருப்பம் நிறைவேற முடியாது,'' ஒட்டகத்தை விட்டு அவன் கீழே குதித்துவிட்டான்.

மஜ்னூனின் நிலையில்தான் உங்கள் உயிர் இருக்கிறது. உங்கள் உடலைக் குதிரை என்றால், உங்கள் உள்ளத்தை அதில் பிரயாணம் செய்யும் குதிரை வீரன் என்று குறிப்பிடலாம். குதிரை வீரனின் லட்சியம் உருப்பெற வேண்டுமானால், அவன் அந்தக் குதிரையை அடக்கியாள வேண்டும். இல்லை யேல், அந்தக் குதிரை தான் விரும்பும் திசையில் நடைபோட ஆரம்பித்துவிடும். அப்புறம், குதிரை வீரன் செல்ல வேண்டிய இடத்துக்கும் அவன் வந்தடைந்திருக்கும் இடத்துக்கும் நீண்ட இடைவெளி தோன்றிவிடும்.

உங்கள் உடல் வளர்ச்சிக்கென்று நீங்கள் எதுவேண்டுமா னாலும் செய்து கொள்ளலாம். நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அதே வேளையில் உங்கள் உள்ளத்தையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. உடலுக்கு எது உணவாகப் பயன்படு கிறதோ, அது நிச்சயமாக உள்ளத்துக்கு உணவாகப் பயன்பட முடியாது. ஏனெனில் குதிரைக்குப் பயன்படும் ஒன்று குதிரை வீரனுக்குப் பயன்பட முடியாது.

உங்கள் உள்ளம் என்றைக்கும் புனிதமானது! அதற்குரிய உணவு முற்றிலும் மாறுபட்டது. அந்த உணவு உள்ளத்துக்குப் பலம் கொடுக்கும். இதனால் உடலை அடக்கியாண்டு இறை வழியில் திருப்பும் ஆற்றல் அதற்குக் கிடைக்கும். உடலுக் குரிய உணவை விட உள்ளத்துக்குரிய உணவு சிறப்பு மிக்கது. ஏனெனில் முன்னது உடலை மட்டுமே வளர்க்கும். ஆனால் பின்னது உள்ளத்தையும் உடலையும் வளர்க்கும்.

இந்த ஆத்மீக உணவைத்தான் பெருமானார் ஒரு சமயம் தம் நண்பர்களுக்கு இப்படிச் சுட்டிக் காட்டினார்கள்: ''இறை



வன் முன்னிலையில் நான் இரவு நேரத்தைச் செலவிடுகிறேன். உண்பதற்கும் குடிப்பதற்கும் அவன் எனக்குக் கொடுக்கிறான்.''

பெருமானாரிடமிருந்து உதிர்ந்த இந்தத் தத்துவம் உள்ளத் துக்கு வேண்டிய உணவைக் காட்டினாலும் பெரும்பாலோர் இந்த வழியில் நடப்பதில்லை. ஏனெனில் சபல எண்ணம் படைத்தவர்களால் இந்த வழியில் நடக்க முடியாது. அவர்கள் இரவு நேரம் முழுவதும் தூங்குகிறார்கள்; பகல் நேரம் முழுவதும் உள்ளத்துடன் தொடர்பு கொள்ளாத வேலை களைச் செய்து சாப்பிடுகிறார்கள். தம் உள்ளத்தைப் பற்றியோ உயிரைப் பற்றியோ அவர்கள் கவலைப்படுவதில்லை. தம் உடலைத் தவிர்த்து அவர்களுக்கு வேறு எந்த லட்சியமும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அவர்களின் உள்ளங் கள் வளர்ச்சியின்றி நலிந்து கொண்டிருக்கின்றன; தம் லட்சி யத்தையும் பொறுப்பையும் மறந்து முற்றிலும் மாறுபட்ட திசையில் சென்று கொண்டிருக்கின்றன.

— இப்படி மூச்சு விடாமல் தத்துவங்களை இறைத்துக் கொண்டிருந்த மவ்லானா ரூமி அவர்கள், சிறிது நேரம் மவுனம் சாதித்தார்கள். சுற்றிலும் உட்கார்ந்திருந்த மாணாக்கர் கள் ரூமியின் கருத்துக்களை எழுத்தில் அடைத்துக் கொண்டி ருந்தார்கள். வினா எழுப்பியவர் மவ்லானா ரூமிக்கு எதிரில் ஆழ்ந்த சிந்தனையுடன் உட்கார்ந்திருந்தார்.

மவ்லானா ரூமியின் பார்வை மீண்டும் உயர்ந்தது. ''நீங்கள் மற்றவர்களைப் போல் நடக்கக் கூடாது. உங்கள் உள்ளத்தை நீங்கள் மறக்கக் கூடாது. உங்களால் இயன்ற அளவு அதனை வளர்க்க வேண்டும். உங்கள் உள்ளத்துக்கு உங்கள் உடல் அடிமையாக இருக்க வேண்டும். முன்னது காட்டும் வழியில் பின்னது செல்ல வேண்டும். உங்கள் உள்ளம் உடலுக்கு அடிமைப்பட்டு விடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். இல்லையேல் ஆத்மீகத் துறையில் உங்களால் வெற்றியடைய முடியாது. உங்களுக்கிருக்கும் பொறுப்பு

களில் எதை வேண்டுமானாலும் நீங்கள் மறந்து விடலாம். ஆனால், இந்த ஒரே ஒரு பொறுப்பை மட்டும் நீங்கள் மறக்கக் கூடாது. ஏனெனில் இது மறக்க முடியாத பொறுப்பு.

வான இயல் நிபுணர்களின் கருவியைப் போன்றவன் மனிதன். அந்தக் கருவியின் துணை கொண்டு விண்ணகத்தை ஆராய முடியும். இதுபோன்று மனிதனை மையமாக வைத்து இறைவனைத் தெரிந்து கொள்ளலாம். — **மவ்லானா ரூமி.**

# இறை வணக்கம்

மவ்லானா ரூமியை அடிக்கடி சந்தித்து உரையாடிவர்களில் பர்வானாவுக்கு முதலிடமுண்டு. மங்கோலிய ஆட்சியில் பொறுப்பு வாய்ந்த பதவியிலிருந்த பர்வானா சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் மவ்லானா ரூமியைத் தேடி வந்தார். ஒருநாள் மவ்லானா ரூமிக்கு எதிரில் வந்து மரியாதையுடன் உட்கார்ந்த பர்வானா தமது மனக்குறையை வெளியிட்டார்.

''என் உள்ளமும் உயிரும் இறை பணிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த மங்கோலிய ஆட்சியில் எனக்கிருக்கும் பொறுப்பு என் ஆசைக்கு தடை விதிக்கிறது. அரசாங்க வேலைகளில் நான் மும்முரமாக ஈடுபடவேண்டியிருப்பதால் இறை பணியை என்னால் கவனிக்க முடியவில்லை. இந்த வேதனை என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கிறது.''

மவ்லானா ரூமியின் முகத்தில் சலனமில்லை. அவர்களின் பார்வையில் விந்தையுணர்வு காணப்படவில்லை. ''நீங்கள் ஈடுபட்டிருக்கும் அரசாங்க வேலைகள், இறைவனின் வேலைகளாக இருக்க முடியாது என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்கள் எண்ணம் முற்றும் தவறானது...'' என்று முத்தாய்ப்பு வைத்த ரூமி அவர்கள் தொடர்ந்து பேசுகிறார்கள்:

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கும் இஸ்லாமிய ஆட்சியை நிலைப்படுத்துவதற்கும் நீங்கள் அரும்பாடு படுகிறீர்கள். எனவே நீங்கள் செய்யும் வேலைகள் நிச்சயமாக இறைவனின் வேலைகள்தாம். நாட்டு மக்களிடையே அமைதியைத் தோற்றுவிப்பது முக்கியமான வேலை மட்டுமல்ல, இறைவனின் அன்பைப் பெற்ற வேலையுமாகும். நீங்கள் செய்துவரும் வேலைகளைத் தவறானவை என்றோ தேவையில்லாதவை என்றோ யாராலும் சொல்ல முடியாது.

நாட்டின் அரசியல் அமைதிக்காக நீங்கள் ஒருபுறம் அரும்பணிபுரிந்து கொண்டிருக்கும் அதே வேளையில், மறுபுறம் ஒரு சில முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒருமித்தமனத்தோடு இறைபணியில் ஈடுபடுகிறார்கள்: அவர்கள் எந்தத் தொந்தரவும் இல்லாமல் முழு அமைதியுடன் இறை வழியில் செல்லவேண்டும் என்பதற்காக, நீங்கள் எத்தனையோ தியாகங்கள் செய்கிறீர்கள். இந்த வகையில் அவர்கள் செய்யும் இறைபணிக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு மகத்தானது. இதனால் அவர்கள் செய்யும் நற்காரியங்களில் நீங்களும் பங்கு பெறுகிறீர்கள். எனவே அரசியல் கண்ணோட்டத்துடன் நீங்கள் செய்து வருவது நிச்சயமாக நல்ல காரியம்தான்; இதில் சிறிதும் சந்தேகம் கிடையாது.

இந்த நல்ல வேலைக்காக இறைவன் உங்களை நியமித்திருக்கிறான். இரவு பகல் எந்நேரமும் உங்கள் மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் பொறுப்புணர்வே இதற்குப் போதிய ஆதாரமாகும். இன்னும் சொல்லப் போனால் இந்தப் பொறுப்புணர்வுகூட இறைவனிடமிருந்தே உங்களுக்கு வந்திருக்கிறது, நெருப்பிலிருந்து தண்ணீருக்குச் சூடு வருவதுபோல்.

நாம் தவறாமல் உபயோகிக்கும் இயற்கைச் செல்வங்களில் தண்ணீருக்கு முதலிடமுண்டு. அது மேகக் கூட்டத்திலிருந்து தெளிக்கப்பட்டாலும் புனலூற்றுக்களிலிருந்து பொங்கி வந்தாலும் அதன் இயற்கைக் குணம் ஒரே விதமானது தான். நீரின் குணங்கள் எத்தனை இருந்தாலும், அவற்றில் சூடு என்று ஒரு குணம் கிடையாது. நெருப்பிலிருந்து தான் அதில் சூடு ஏற வேண்டும். இதனால்தான், வெந்நீரில் குளிக்க நினைக்கும் நாம் விறகுக் கட்டைகளைப் பயன்படுத்துகிறோம். சில வேளைகளில் இதற்கும் நாம் கரித் துண்டுகளையும் பயன்படுத்துவதுண்டு. கரித் துண்டுகளில் பிறக்கும் நெருப்பு முதலில் அடுப்பைச் சூடாக்குகிறது. அப்புறம் அந்தச் சூடு, அடுப்புமீது வைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்ப் பானைக்கு வருகிறது. இப்படி, கரித்துண்டிலிருக்கும் சூடு குளிர் நீருக்குள் புகுந்து விடுகிறது.



வெந்நீரை உபயோகிக்கும் போது அதிலுள்ள சூட்டைப் பற்றி நாம் சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை. சூடு என்பது தண்ணீரின் குணத்துக்கு மாறுபட்டதாயிருந்தாலும், நெருப்புத் துண்டுகள் தம் வலிமையை நிரூபித்துக் காட்டி விடுகின்றன.

நெருப்புக்குச் சிறைப்பட்ட தண்ணீர், நெருப்பின் குணத்தைத் தன் குணமாக்கிக் கொள்வதுபோல் இறைவனுக்கு அருகிலிருக்கும் மனிதன், இறைவனின் வேலையைத் தன் வேலையாக்கிக் கொள்கிறான். இத்தகைய நல்லடியார்கள் செய்யும் வேலைகள் வெளிப்படையாகப் பார்க்கிறவர்களுக்கு எப்படித் தோன்றினாலும், உண்மையில் அவர்கள் இறைவனின் வேலைகளையே செய்கிறார்கள். தண்ணீரில் கிடைக்காத பல நன்மைகள் வெந்நீரில் கிடைப்பது போல் - சாதாரண மனிதர்களால் உருவாக்க முடியாத பல நன்மைகள் உங்களைப் போன்ற அரசியல் அதிகாரிகளால் நாட்டுக்கு உருவாகின்றன.

இறைவனிடமிருந்து வந்திருக்கும் புனித உணர்வு உங்களை ஓயாமல் இயக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் நீங்கள் அல்லும் பகலும் மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறீர்கள். எனவே நீங்கள் செய்வது நற்காரியம் தான்.

... இப்படி மவ்லானா ரூமி பேசிக் கொண்டிருந்த போது நண்பர்கள் சிலர் உள்ளே வந்தார்கள். சிந்தனைச் சூழலில் சிக்கியிருந்த ரூமி, நண்பர்களைக் கவனிக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகுதான் தம் நண்பர்கள் வந்திருப்பதை ரூமி கவனித்தார்கள்; தாம் கவனக் குறைவாக இருந்தது குறித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

''நீங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை. ஒரு வேலையில் முழு மனத்தோடு ஈடுபட்டிருக்கும் போது வேறொரு வேலையைக் கவனிக்க முடியாது; நீங்கள் வந்ததும் நான் உங்களிடம் உரையாடாதது குறித்துத் தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள். உங்களையெல்லாம் நான் மதிக்கவில்லை என்றோ உங்களுடன் உரையாடுவதை நான் விரும்பவில்லை என்றோ பொருள் கற்பித்துக் கொள்ளாதீர்கள். உண்மையில் உங்களை நான் மதிக்கிறேன்; உங்களுடன் உரையாடுவதை விரும்புகிறேன்.

''ஒவ்வொரு மனிதனும் தன் பெற்றோரை விரும்புகி றான்; மதிக்கிறான். ஆனால் அவன் இறை வணக்கத்தில் ஈடுபட்டிருக்கும்போது அவனால் தன் பெற்றோருடன் உரை யாட முடியுமா? இறைவணக்கத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு வன் தன் பெற்றோர் வந்ததைக் கவனிக்கத் தவறிவிட்டால், அவன் மீது குற்றம் சாட்டுவது நியாயமாகுமா?''

''ஒருமித்த மனதோடு ஒருவன் இறை வணக்கத்தில் ஈடுபடும்போது, அவன் தன்னையே மறந்துவிடுகிறான். தன்னையே மறந்திருக்கும் ஒருவனுக்கு மற்றவர்களைப் பற் றிய நினைவு எப்படி வரமுடியும்? அப்படி அவன் இறை வணக்கத்துக்கு நடுவே மற்றவர்களை நினைத்துப் பார்த்தால், அவனுடைய வணக்கத்தில் ஒருமித்த மன நிலை கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

'ஒருமித்த மனத்தோடு நான் உரையாடிக் கொண்டிருந்த தால் உங்களை என்னால் உடனுக்குடன் கவனிக்க முடிய வில்லை. அவ்வளவுதான்..'' என்று மவ்லானா ரூமி பேசிக் கொண்டிருக்கும் போதே, வந்திருந்த நண்பர்களில் ஒருவருக் குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. அவர் மவ்லானா ரூமியை யும் அவர்கள் கூறிய கருத்துக்களையும் மறந்து விட்டார். அவரது சிந்தனை இறைவணக்கத்தைச் சுற்றி வட்டமிட்டது.

''இறைவனை நெருங்குவதற்கு இறைவணக்கத்தை விட வேறு ஏதேனும் வழி இருக்கிறதா?'' என்று அவர் கேட்டார்.

''நண்பர் வீசிய வினா அந்தப் பாரஸீக ஞானியின் சிந்தனையைத் தூண்டி விட்டிருக்க வேண்டும். எனவே மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் இறை வணக்கம் பற்றி விரிவுரை கொடுத்தார்கள்.

இறைவனை நெருங்குவதற்கு இறை வணக்கமே சிறந்த வழிதான். அதைத் தவிர்த்து வேறொன்றை நீங்கள் ஏன் தேடுகிறீர்கள்? ஆனால் இறைவணக்கம் என்றால் என்ன என்பதை நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். வெளித் தோற்றத்தைப் பார்த்து நீங்கள் ஏமாந்து விடக் கூடாது.



மனிதனுக்கு உடல், உயிர் என்று இரு பகுதிகள் இருப்பது போல் இறைவணக்கத்துக்கும் உடல், உயிர் என்று இரு பகுதிகள் இருக்கின்றன. நம்மைச் சுற்றியிருப்பவர்களில் பெரும்பாலோர் உயிரற்ற வணக்கங்களிலேயே ஈடுபடுகிறார் கள். இப்படிச் சொல்வதை விட, உயிருள்ள இறை வணக் கத்தை உயிரற்றதாகச் செய்து விடுகிறார்கள் என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும். இத்தகைய வணக்கத்தை வைத்து நிச்சயமாக இறைவனை அணுக முடியாது.

எந்த வழிபாட்டுக்கும் ஒரு வரையறை உண்டு. அதற்கு ஓர் ஆரம்பமும் ஒரு முடிவும் இருக்கின்றன. ஆரம்பமும் முடிவும் உள்ள பொருள்களை நாம் சடங்குகள் என்று குறிப்பிடலாம்.

இஸ்லாமிய முறைப்படி நாம் மேற்கொள்ளும் இறைவ ணக்கத்திற்கு ஓர் ஆரம்பமுண்டு என்பது, ஆதாரம் காட்டி நிரூபிக்க வேண்டிய தேவையில்லாத ஒன்று. இதுபோலவே அதற்கு ஒரு முடிவும் உண்டு.

சட்டப்படி கை, கால், முகம் முதலியவற்றைக் கழுவிக் கொண்டு மக்காவின் திசையை முன்னோக்கி நின்று, ''அல் லாஹு அக்பர்' என்று கூறி நீங்கள் தொழுகையை ஆரம்பிக்கி றீர்கள் அல்லவா? இது தொழுகையின் ஆரம்பம். அப்புறம், இறுதியில் ''அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹ்'' என்று கூறித் தொழுகையை முடிக்கிறீர்கள் அல்லவா? இது தொழுகையின் முடிவு.

இந்த இரண்டிற்கு மிடையில் குனிந்து வணங்குவது, சிரத்தைத் தரையில் வைப்பது முதலான பல வேலைகளைச் செய்கிறீர்கள் அல்லவா? இந்தச் செயல் முறைக்கு 'இறை வணக்கத்தின் உடல்' என்று பெயரிடலாம்.

இந்த இறை வணக்கத்தைப் பெருமானார் தாம் நமக்கு அறிமுகப்படுத்தினார்கள். அவர்களுக்கு முந்திய திருத்தூதர்க ளில் யாரும் இந்த முறையை ஏற்படுத்தவில்லை.

இப்படிக் குனிவது, நிமிர்வது, உட்காருவது, சிரத்தைக் கீழே வைப்பது முதலான பகுதிகளுடன் கூடிய செயல்

முறையை மட்டுமே அநேகர் இறை வணக்கம் என்று குறிப்பிடுகிறார்கள். இது இறை வணக்கத்தில் ஒரு பகுதி என்பதை யாரும் மறக்க முடியாது. ஆனால் இதை மட்டும் இறை வணக்கம் என்று சொல்ல முடியாது. ஏனெனில் அதற்கு உயிர் போன்ற மற்றொரு பகுதி இருக்கிறது. இந்தப் பகுதி இல்லையேல், முதற் பகுதிக்கு மதிப்பு கிடையாது. உயிரற்ற வெற்றுடலை யாரும் மதிப்பதில்லை.

எப்படிச் சிரவணக்கம் செய்ய வேண்டும், எப்படி உட்கார்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று பல சட்டங்கள் இருப்பது போல், இறைவணக்கத்தில் ஈடுபடுகிற வர்களில் மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்றும் பல சட்டங்கள் இருக்கின்றன. இறைவணக்கத்தில் ஈடுபடுகிறவர் கள் இறைவனைப் பற்றிய எண்ணத்தை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஒருமித்த மனதோடு இறைவனை வணங்கும் அவர்கள் வேறு யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் நினைத்துப் பார்க்கக் கூடாது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் தம்மையே மறந்துவிட வேண்டும்.

ஒரு மனிதன் இப்படி இறைவணக்கம் புரியவில்லை என்றால், அவனுடைய வழிபாட்டில் நிச்சயமாக உயிர் இருக்காது. இதனால்தான் ஒருமித்த மனநிலை, பக்தி முதலா னவை இல்லாமல் உருவாகும் வணக்கத்தை ஞானிகள் வெறுத்தார்கள். எனவே ஐங்காலத் தொழுகையை முறைப்படி நிறைவேற்றிய அவர்கள், தம்முடைய நேரத்தில் பெரும் பகுதியை ஆழ்ந்த இறை சிந்தனையில் செலவிட்டார்கள். தம்மிடம் யார் வருகிறார்கள், தமக்கு யார் 'ஸலாம்' சொல்கி றார்கள் என்ற உணர்வும் கூட இல்லாமல் அவர்கள் இறை சிந்தனையில் தம்மையே மறந்திருந்தார்கள்.

என்னுடைய ஞானாசிரியர் பஹாவுல் ஹக் அவர்களின் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது. ஒருநாள் அவர்கள் தம்மையே மறந்து விடும் அளவுக்கு இறை தியானத்தில் மூழ்கியிருந்தார்கள். சுற்றிலும் உட்கார்ந்திருந்த நண்பர்களைக் கூட அவர்கள் பொருட்படுத்த



வில்லை. தம்மையே மறந்திருந்திருக்கும் மனிதருக்குத் தம் நண்பர்களைப் பற்றிய நினைவு எப்படி வர முடியும்?

தொழுகைக்குரிய நேரம் வந்தது. நண்பர் ஒருவர் அருகில் வந்து, ''தொழுவதற்குரிய நேரம் வந்து விட்டது'' என்று கூறினார். ஆனால் அறிஞர் பஹாவுல் ஹக் அவர்கள் நண்பரின் வார்த்தைகளைக் கவனித்ததாகவே தெரியவில்லை. எனவே அவர்களின் சிந்தனையைக் கலைக்க விரும்பாத நண்பர்கள் தொழுவதற்குச் சென்று விட்டார்கள். தொழுகைக்குச் செல்லா மல் பஹாவுல் ஹக்குடன் இருந்தவர்கள் இரண்டே இரண்டு பேர்.

தொழுகைக்குச் சென்றவர்கள் தம் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். அவர்களில் ஒருவர் இறைவ ணக்கத்தின் போது ஓர் உண்மையைத் தெரிந்து கொண்டார். பஹாவுல் ஹக்கை விட்டுத் தொழுகைக்குச் சென்றவர்கள் உண்மையிலேயே தம் உள்ளத்தை இறைவன் பக்கம் திருப்ப வில்லை என்றும், தொழுகைக்குச் செல்லாமல் உட்கார்ந்திருந் தவர்கள் ஒருமித்த மனத்தோடு இறைவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றும் அவர் தெரிந்து கொண்டார். இதனை அவருக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. அவருடைய அடிமனமே அவருக்கு அதை விளக்கிக் காட்டி விட்டது.

இதை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. இறை சிந்தனையில் ஈடுபடுகிறவர்களுக்கு ஐங்காலத் தொழுகை தேவையில்லை என்று நான் கூறுவதாக நினைத்து விடாதீர் கள். ஐங்காலத் தொழுகைகள் தவிர்க்க முடியாதவை. அவை தேவையற்றவையாயிருந்தால், பெருமானாரே கூறியிருப்பார் கள். ஆனால் அவர்கள் ஐங்காலத் தொழுகைக்குக் கொடுத்தி ருக்கும் முக்கியத்துவம் மறக்க முடியாதது. எனவே இறை சிந்தனையில் ஈடுபடுகிறவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய தில்லை என்று என்னால் சொல்ல முடியாது.

அப்படியானால் நான் என்னதான் சொல்கிறேன் என்று கேட்கிறீர்களா? நீங்கள் ஈடுபடும் இறை வணக்கத்தை உயிருள்

ளதாக ஆக்குங்கள் என்றே நான் கூறுகிறேன். உள்ளம் இறைவனை மறந்து எங்கெங்கோ சுற்றிக் கொண்டிருக்கும் போது, குனிந்து நிமிர்வதால் லாபமில்லை. இதுபோன்ற வணக்கங்களில் நிச்சயமாக உயிர் இருக்காது. எனவே உங்கள் வணக்கம் உயிருள்ளதாக இருக்க வேண்டுமானால், உங்கள் உள்ளம் இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

''இறைவனை நீங்கள் நேரில் பார்ப்பது போல் வணங்க வேண்டும்''என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

இந்தக் குறிக்கோள் நிறைவேற வேண்டும் என்பதற்காகவே நாம் இறை வணக்கத்தின் போது மக்காவின் திசையை முன்னோக்குகிறோம். பலகோடி உள்ளங்களை இறைவன் பக்கம் திருப்பும் அந்தத் தேவாலயம் உங்கள் உள்ளத்தையும் அவன் பக்கம் திருப்பட்டும். இந்தத் திசைத் தத்துவத்தை நாமாகவே உருவாக்கிக் கொண்டோம் என்று கூறுவது தவறு. இதனை ஏற்படுத்தியவர்கள் பெருமானார், அவர்களுக்கு வழி காட்டியவன் இறைவன்.

இறை வணக்கத்தின்போது ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதை அடுத்து வரும் சம்பவம் விளக்குமென்று நான் நினைக்கிறேன்.

ஒரு சமயம் பெருமானார் தம் நண்பர்களில் ஒருவரைப் பார்த்துக் கேட்டார்கள்: ''உங்களைச் சற்றுமுன் நான் கூப்பிட்டேனே, நீங்கள் ஏன் வரவில்லை?''

நண்பர் கூறினார்: ''நான் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தேன்.''

பெருமானார் தமது நண்பரை ஊடுருவிப் பார்த்தார்கள். ''சரி, நான் உங்களைக் கூப்பிடவில்லையா? என் கூப்பாடு உங்களுக்குக் கேட்கவில்லையா?''

நண்பர் சொன்னார்: ''எனக்கு ஒன்றும் தெரியாது. தாங்கள் கூப்பிட்டது எனக்குக் கேட்கவில்லை!'' - நண்பர் கூறிய விடையில் ஆச்சரியம் எதுவுமில்லை. இறைவணக்கத்தில் தம்மையே மறந்திருந்த அவர் பெருமானாரின் கூப்பாட்டை எப்படிக் கேட்டிருக்க முடியும்!



தன்னையே மறந்த நிலை... இறைவனைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் மறந்த நிலை! இப்படிச் சொல்வதை விட, புலனுணர்வுகளையே இழந்துவிட்ட நிலை என்று குறிப்பிடலாம். இந்த நிலையைத்தான் ஞானிகள் இறப்பதற்கு முன் இறப்பது என்று சுட்டிக் காட்டுகிறார்கள். மரணத்தினால் புலன்கள் அழிகின்றன; ஆனால் ஞானிகள் இறப்பதற்கு முன்பே தம் புலன்களை அழித்துக் கொள்கிறார்கள்! உள்ளம் ஒரு புள்ளியில் நிற்கும்போது, அதற்கு அப்பாற்பட்ட எதையும் புலன்கள் கவனிப்பதில்லை.

உண்மையில் இந்த நிலை மிகச் சிறந்தது. எல்லா நேரங்களிலும் உங்களால் இப்படி இருக்க முடிந்தால் செய்யுங்கள். இல்லையேல் இறைவணக்கத்தின் போதாகிலும் அப்படி இருக்க முயற்சி செய்யுங்கள்.

உங்கள் சக்தியை உயர்த்தி மதித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் சக்திக்கு மேலே இறைவனின் சக்தி அமைதியுடன் காத்திருக்கிறது. அவனுடைய சக்திக்கு முன்னால் நீங்கள் அற்பத் துரும்புக்கு நிகரானவர். நீங்கள் மட்டுமல்ல உலகிலுள்ள அத்தனையும் அவன் ஆற்றலுக்கு அடிபணிகின்றன; அடிபணிந்துதான் தீர வேண்டும். அவனுடைய ஒளியைத் தாங்கும் ஆற்றல் எந்தப் பொருளுக்கும் கிடையாது.

அவன் சக்தி மிக்க பேரரசன். அவனுடைய ஒளி, சந்திரனின் ஒளியைப் போன்றதுமல்ல; சூரியனின் ஒளியைப் போன்றதுமல்ல. இந்த ஒளிக் கற்றைகளை மனிதன் அளந்து பார்த்து விடுவான். ஆனால் இறைவனின் ஒளி மனிதனின் அளவுகோலுக்கு அப்பாற்பட்டது. அந்த ஒளிக்கு முன்னால் விண், மண், மலை, கடல், அத்தனையும் நடுங்குகின்றன. அந்த ஒளி சுத்தமாக வெளிப்பட்டால், அதனைச் சந்திரனாலும் தாங்க முடியாது; சூரியனாலும் தாங்க முடியாது.

இந்த ஒளியில் ஒரு மனிதன் இன்பம் காணும்போது அவன் அகிலத்தையே மறந்து விடுகிறான்; தன்னையே மறந்து விடுகிறான்; அதாவது - இறப்பதற்கு முன்பே இறந்துபோய் விடுகிறான்! இந்தக் கட்டத்தில் நிலைத்து நிற்பது ஒரே பொருள். அதற்கு எப்படி வேண்டுமானாலும் நீங்கள் பெயரிடுங்கள். வேண்டுமானால் 'இறைவன்' என்று சொல்லுங்கள். வார்த்தைகளில் வேறுபாடு இருந்தாலும், அவை குறிக்கும் பொருளில் வேறுபாடு கிடையாது. ஏனெனில் அது ஒரே பொருள்; எங்கும் நிறைந்து அனைத்தையும் அடக்கியாளும் ஒரே பொருள்.

பக்தி நிறைந்த அரசன் ஒருவன் மெய்ஞ்ஞானி ஒருவரைப் பார்த்துக் கூறினான்: ''தங்களுக்கு இறை சந்திப்பு கிடைக்கும் போது என்னை நினைத்துப் பாருங்கள்!''

அந்த ஞானி சிரித்தார்.

''எனக்கு இறை சந்திப்புக் கிடைக்கும்போது உங்களை நினைத்துப் பார்ப்பதா? அதெப்படி முடியும்? அந்த ஒளியில் நான் நிற்கும்போது என்னையே நினைத்துப் பார்க்க முடியாதே! அப்படியிருக்க, உங்களை எப்படி நினைத்துப் பார்க்க முடியும்?''

எனவே, தன்னைத் தானே இறை சிந்தனையில் அழித்துக் கொள்வதையே இறை வணக்கம் என்று நாம் குறிப்பிடுகிறோம். இது இறை வணக்கத்துக்கு உயிர் போன்றது. இப்படி இறைவனை வணங்குகிறவர்கள் அடையும் இன்பம் விளக்கத்திற்கு அப்பாற்பட்டது. உலகத்திலுள்ள இன்பங்கள் அனைத்தையும் விட அவர்கள் இந்த இன்பத்தை உயர்த்தி மதிப்பார்கள்.

''இறை வணக்கத்தில் எனக்குக் கிடைக்கும் இன்பம், முக்கியமான உலக இன்பங்களில் ஒன்று'' எனும் நபிக் கருத்து இதையே காட்டுகிறது.

மவ்லானா ரூமி அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டார்கள். நண்பர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.



சிறிது நேரத்திற்குப் பின் ரூமியின் குரல் கம்பீரமாகத் தொனித்தது.

''எனவே, இறை வணக்கம் என்பது இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று உயிர்; மற்றொன்று உடல். இந்த இரண்டும் முக்கியம்தான். என்றாலும் உடலை விட உயிர் முக்கியமானது. உயிர் இல்லையேல் உடலுக்கு மதிப்புக் கிடையாது. உடலை மட்டும் குறியாக வைத்துச் செயலாற்றினால் அதில் உயிர் இருக்காது. எனவே அதற்கு இறைவணக்கம் எனும் பெயர் பொருந்தாது. ஏனெனில் உடலும் உயிரும் சேர்ந்த ஒன்றைத்தான் நாம் இறை வணக்கம் என்று குறிப்பிடுகிறோம். ஆனால் அதற்காக உடலையும் அலட்சியம் செய்து விட முடியாது. ஏனெனில் உடலில்தான் உயிர் இருக்கிறது. உடல் இல்லையேல் உயிரைக் கண்டுபிடிக்க முடியாது.''

ஒரு மனிதனின் உள்ளம் மற்றொரு மனிதனின் உள்ளத்தோடு தொடர்பு கொண்டு உரையாடுகிறது. இத்தகையவர்கள் வார்த்தைகளை உபயோகிப்பதில்லை. இந்த ஆற்றல் இல்லாதவர்கள் வார்த்தைகளைக் கட்டிக் கொண்டு அழுதுதான் தீர வேண்டும்.

— **ஜலாலுத்தீன் ரூமி.**

# பொருள் செறிந்த திருமறை

மவ்லானா ரூமிக்கு எதிரில் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் ''இப்னு முக்ரீ திருக்குர்ஆனை நன்றாக ஓதுகிறார்!'' என்று கூறினார்.

மவ்லானாவின் முகத்தில் வேதனை படர்ந்தது. ''ஆம், உண்மைதான். திருக்குர்ஆனிலுள்ள வார்த்தைகளை அவர் நன்றாக ஓதுகிறார். ஆனால் அந்த வார்த்தைகளில் மறைந்திருக்கும் கருத்துக்களை அவர் கவனிப்பதாக எனக்குத் தெரியவில்லை.''

சிறிது நேர அமைதிக்குப் பின்னர் மவ்லானா தொடர்கிறார்கள்:

திருக்குர்ஆனை நாம் எப்போதும் ஓதுகிறோம். அதனை மனனம் செய்கிறவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். ஆனால் திரும்பத் திரும்ப ஓதுவதற்காக, அல்லது மனனம் செய்து வைப்பதற்காக மட்டுமே அதனை இறைவன் கொடுத்திருக்கிறான் என்று நினைப்பது தவறு. திருக்குர்ஆன் என்பது, வாழ்க்கைக்கு ஒளி காட்டக் கூடிய இறை வேதம். அதிலுள்ள கருத்துக்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக் கூடியவை. அந்தக் கருத்துக்கள் மறந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே நாம் திருக்குர்ஆனைத் திரும்பத் திரும்ப ஓதுகிறோம்.

எனவே திருக்குர்ஆனை ஓதுகிறவர்கள் முதன் முதலில் அதன் கருத்துக்களை ஊன்றிக் கவனிக்க வேண்டும். எவ்வளவு ஆழமாக அவர்கள் கவனிக்கிறார்களோ அவ்வளவு ஆழமான பொருள்களெல்லாம் அதிலிருந்து வெளிப்படும்.

திருக்குர்ஆனை ஓதிவரும் ஒருவன் அதன் கருத்துக்களைப் புறக்கணித்தால், அவன் திருக்குர்ஆன் ஓதுகிறான்



என்றே சொல்ல முடியாது. இப்படி மனக்கண்ணை மூடிக் கொண்டு திருக்குர்ஆன் ஓதுகிறவர்கள் மிக ஆரம்ப நிலையில் இருக்கிறார்கள். ஆத்மீகத்தின் உச்சியை அடைவது, இவர்களைப் பொறுத்தமட்டில் மிகச் சிரமமான ஒன்று. இவர்கள் திருக்குர்ஆனின் வார்த்தைகளை மட்டுமே கட்டிக் கொண்டு மாரடிக்கிறார்கள். அதன் கருத்துக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

இப்படிக் குருட்டுத்தனமாக குர்ஆன் ஓதுகிறவர்களை நினைக்கும் போதெல்லாம், தெருவில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களின் எண்ணமே எனக்கு ஏற்படுகிறது.

அவர்கள் தெருவில் நின்று விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் விளையாட்டுப் பொருள்கள் உண்மையிலேயே விளையாட்டுப் பொருள்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது கிடையாது. அவை விளையாட்டுக்குப் பயன்பட்டால் போதும், விளையாட்டு ஒன்றுதான் அவர்களின் குறிக்கோள். எனவே அந்தப் பொருள்களிலுள்ள இதர உபயோகங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களில் ஒருவனைப் பிடித்து, அவன் கையிலுள்ள பொருளைப் பிடுங்கிப் பாருங்கள். அவன் 'வீல்' என்று கத்துவான். அதைவிடச் சிறந்த பொருளைக் கொடுங்கள். ''இது எனக்கு வேண்டாம்!'' என்று பிடிவாதம் செய்வான். 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்' என்று ஒரு முதுமொழி இருக்கிறதல்லவா? இந்த முதுமொழியிலுள்ள உண்மையைச் சிறுவர்களிடம் தெளிவாகப் பார்க்கலாம். ஆனால் இந்த உண்மைக்குப் பெரியோரும் பலியாவதைப் பார்க்கும் போது வேதனையாகத்தான் இருக்கிறது.

சிறுவன் ஒருவன் தன் விளையாட்டுப் பொருளைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் புறக்கணிப்பது போல், திருக்குர்ஆன் ஓதுகிறவர்களில் சிலர் அதன் வெளித் தோற்றத்தைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் புறக்கணிக்கிறார்கள்.

திருக்குர்ஆனில் அடங்கியிருக்கும் அறிவுகள் பல கோடி. அத்தனையும் இறைவனுடைய அறிவுகள். வெளித்தோற்றத் தில் ஓர் அறிவு இருந்தால், உட் தோற்றத்தில் ஓராயிரம் அறிவுகள் இருக்கின்றன. திருக்குர்ஆனில் ஒரு சிறு பகுதியை விரும்பும் அவர்கள், மிகப் பெரும் பகுதியை ஏன் புறக்கணிக் கிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை.

திருக்குர்ஆனிலுள்ள அறிவுகளுக்கு இறைவனே இப்படி விளக்கம் கொடுக்கிறான்:

''இறைவனின் வார்த்தையை விளக்குவதற்கென்று கடல் முழுவதும் சாயமாக இருந்தாலும், விளக்கம் முடிவதற்குள் சாயம் தீர்ந்து போகும்.''

திருக்குர்ஆன் என்பது இறைவனின் பேச்சு. இறைவனின் அறிவுகள் அந்தப் பேச்சின் மூலம் மனிதனுக்குக் கிடைக்கின் றன. இந்த தெய்வப் பேச்சை நாம் திருக்குர்ஆனின் அரபி மொழியில் பார்க்கிறோம். மூஸா நபி ஈஸா நபி முதலியோருக் குக் கொடுக்கப்பட்ட வேதங்கள் அரபி மொழியில் வர வில்லை என்றாலும், அவற்றையும் இறைவனின் பேச்சுக்கள் என்றே நாம் ஏற்றுக் கொள்கிறோம். இறைவன் தனிப்பட்ட எந்த மொழிக்கும் சொந்தமானவனல்ல. எனவே அவன் எந்த மொழியிலும் பேசலாம்.

திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களுக்குப் பெருமானா ரின் காலத்தில் தனிப்பட்ட மதிப்பு இருந்தது. திருக்குர்ஆனில் ஓர் அத்தியாயத்தை அல்லது அரை அத்தியாயத்தை மனனம் செய்தவர்கள் கூடப் பெரிதும் போற்றப்பட்டார்கள். இப்படி மனனம் செய்த ஒருவர் வீதியில் நடந்தால், அவரை மக்கள், 'இவர் ஓர் அத்தியாயத்தை மனனம் செய்திருக்கிறார்' என்று கண்ணியத்தோடு சுட்டிக் காட்டுவார்களாம்.

இது உண்மையிலேயே கண்ணியமானதொரு வேலை தான். ஒரு மணங்கு ரொட்டியை ஒருவன் தின்று விட்டால் ஆச்சரியப்படுவதற்கு இடமுண்டு. ஆனால் மக்கள் ரொட்டி யைச் சாப்பிடுவதில்லை. ரொட்டியைத் துண்டு துண்டாகப் பிய்த்து வாயில் போட்டுத் துப்பிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வது அற்புதமான காரியமல்ல. ஒரு மணங்கு ரொட்டியை என்ன, ஓராயிரம் ரொட்டியைக் கூட இப்படித் துப்பிக் கொண்டிருக்கலாம். பொருளைப் பொருட்படுத்தாமல் திருக்குர்ஆன் ஓதுகிறவர்கள் இப்படித்தான் செய்கிறார்கள். திருக்குர்ஆனின் வார்த்தைகளை அவர்கள் வாயளவில் ஓதுகி றார்களே தவிர, அதன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சத்துக்கு இறங்குவதில்லை.



இப்படித் திருக்குர்ஆனின் கருத்துக்களை அடியோடு விட்டுவிட்டு வாயளவில் மட்டும் ஓதுகிறவர்களைப் பெருமா னார் கண்டிக்கிறார்கள்:

''திருக்குர்ஆனை ஓதுகிறவர்களில் பலரைத் திருக்குர் ஆனே முனிகிறது; திட்டுகிறது.''

திருக்குர்ஆனின் வார்த்தைகளுக்கும் அதன் கருத்துக்களுக் குமுள்ள வேறுபாட்டைப் பெரும்பாலோர் உணர்ந்து கொள்ள வில்லை. இதுவும் நன்மைக்குத்தான். அவர்களின் பார்வைக்கு இறைவன் திரை போட்டு வைத்திருக்கிறான். எனவே அவர் கள் தமது ஆற்றல் முழுவதையும் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டு இம்மையின் இன்பங்களில் முழுமூச்சோடு ஈடுபடு கிறார்கள்.

மற்றொரு சாரார் இம்மையில் பற்றில்லாமல் வாழ்ந்து கொண்டு மறுமையில் வெற்றிக்குரிய வழியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கும் இறைவன்தான் வழி காட்டுகிறான். இவர்கள் மிகச் சிலர்தான் என்றாலும் மறுமை யின் பெருமையை எடுத்துக் காட்டுகிறவர்களே இவர்கள் தாம். இவர்களுக்குத் திருக்குர்ஆன் அருமையானதொரு வழி காட்டி. இவர்கள் திருக்குர்ஆன் ஓதும்போதும், அதன் கருத்துக்

களுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எனவே மற்றவர்களுக்குத் தெரியாத மர்மங்களை எல்லாம் இவர்கள் திருக்குர்ஆனின் உதவியைக் கொண்டே தெரிந்து கொள்கிறார்கள்.

மனவேதனை என்பது மனிதன் அனுபவிக்கும் துன்பங்களில் ஒன்று. ஆனால் அது பயன் தரக்கூடியது. மனத்தில் தோன்றும் வேதனை அவனைக் குறிக்கோளின் பக்கம் உந்தித் தள்ளுகிறது. இந்த மனவேதனை நிலைக்கும் போதெல்லாம் அவன் முன்னேறிக் கொண்டிருப்பான். இந்த வேதனை இல்லை என்றால், அவனால் தன் குறிக்கோளை அடைய முடியாது. உயிரற்ற பொருள்களுக்கு மனவேதனை கிடையாது.

- **மவ்லானா ரூமி**

# அன்பும் அழகும்

உலகத்தில் மனிதன் வாழத் தொடுத்த நாளிலிருந்து இந்த இரண்டும் போற்றப்பட்டு வருகின்றன. இந்த இரண்டையும் பின்னி வைத்து அறிஞர்கள் உருவாக்கிய கருத்துக் கருவூலங்கள் இன்றைக்கும் நம்மிடையே வாழ்கின்றன. இப்படி வந்து புகுந்த காதற் காவியமே 'லைலா மஜ்னூன்' மெய்ஞ்ஞானிகள் மஜ்னூனின் காதலைக் காட்டி தம் கருத்துக்களை விளக்கியிருக்கிறார்கள். 'பேரின்பத்துக்கு இந்தச் சிற்றின்பம் அறிமுகம் கொடுக்கிறது. இதனால்தான் மனிதனுக்கு இறைவன் இந்த இன்பத்தைக் கொடுத்திருக்கிறான்'' என்று அவர்கள் கூறினார்கள்.

மெய்ஞ்ஞானிகளில் பலரது கவனத்தைக் கவர்ந்த இந்தக் காதல் வரலாறு. மவ்லானா ரூமியின் கவனத்தையும் கவர்ந்திருக்கிறது. அவர்களின் அரிய படைப்பென்று பாராட்டப்படும் 'மஸ்னவீ'யில் இந்த வரலாறு அங்கங்கே காணப்படுகிறது.

லைலா மீது மஜ்னூன் கொண்டிருந்த காதல் உலகப் பிரசித்தி வாய்ந்தது. லைலாவின் எண்ணத்திலேயே அவன் அனைத்தையும் மறந்து விட்டான். தெரியாதவர்கள், அவனைப் பித்தன் என்றார்கள். அவர்களைப் பார்த்து அவன் இளக்காரமாகச் சிரித்தான்.

உண்மையில் லைலா அவ்வளவு நல்ல அழகியா? அவள் மீது காதல் கொண்டிருந்த மஜ்னூன், அவளுடைய புற அழகை மட்டும்தானா பார்த்தான்? புற அழகைத்தான் கண்டான் என்றால் வெறும் புற அழகுக்கு ஒரு மனிதனை நிரந்தரமாக ஈர்க்கும் சக்தி இருக்கிறதா?

இத்தகைய வினாக்களுக்கு விடை கொடுக்கும் தகுதி மெய்ஞ்ஞானிகளுக்கே உண்டு. அவர்கள் லைலா மஜ்னூனைப் புதியதொரு கோணத்திலிருந்து பார்க்கிறார்கள். எனவே

மற்றவர்களால் தெரிந்து கொள்ள முடியாத பல தத்துவங்களை அவர்கள் அந்தக் காவியத்திலிருந்து தெரிந்து கொள்கிறார்கள்.

இதோ அன்பையும் அழகையும் பற்றி மவ்லானா ரூமியே பேசுகிறார்கள்:

ஒருவன் அன்பு செலுத்தப்படுகிறான் என்றால் அதற்கு அழகுதான் அடிப்படைக் காரணம் என்று நான் நினைக்கிறேன். எனவே அன்பு செலுத்தப்படுகிறவர்கள் அத்தனை பேரும் அழகுள்ளவர்களாகத்தான் இருக்க வேண்டும். இது என்றைக்கும் நிலையானதோர் தத்துவம். இப்படி அன்பு செலுத்தப்படும் ஒருவர் அழகில்லாதவராக இருக்கிறாரென்று நீங்கள் நினைத்தால், அது உங்கள் தவறு. அவருடைய அழகை நீங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை என்பதே பொருள்.

இது மனிதனுக்கு மட்டுமின்றி, உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும். அழகுள்ள பொருள் எதுவாயிருந்தாலும், அதனை மனிதன் நிச்சயம் விரும்புவான். மனிதன் விரும்பும் பொருள்கள் அத்தனையும் ஏதேனும் ஒரு விதத்தில் அழகுள்ளவையாகத்தான் இருக்க வேண்டும்.

ஆனால், அன்பைப் பெற்ற பொருள்கள் எல்லாம் அழகுள்ளவையாக இருப்பது போல், அழகைப் பெற்ற பொருள்கள் எல்லாம் அன்பைப் பெற்றவையாக இருக்க முடியாது. உயர்ந்த அழகுடன் கூடிய எத்தனையோ பொருள்கள் மனிதனின் அன்பைப் பெற முடியாமல் தவிக்கின்றன.

இந்தக் கட்டத்தில் மஜ்னூன் நம் சிந்தனைக்கு வருகிறான். அவன் லைலா மீது தன் உயிரையே வைத்திருந்தான். அவனுடைய காலத்தில் லைலாவைத் தவிர்த்து வேறு அழகிகளே கிடையாதா? லைலாவை விட அழகிற் சிறந்த எத்தனையோ பெண்கள் அப்போது இருந்தார்கள். ஆனால் அவர்களில் யாரையும் மஜ்னூன் விரும்பவில்லை.

லைலாவையே தன் குறியாக வைத்திருந்த மஜ்னூன் கேலிக்கும் கிண்டலுக்கும் இலக்கானான்.



''மஜ்னூன்! உன் போக்கு எங்களுக்குப் புரியவில்லை. லைலா என்ன பேரழகியா? அவளை விட அழகான பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களே! வேண்டுமானால் அவர்களில் ஒருத்தியை நாங்கள் அழைத்து வருகிறோம். நீயே பார்த்து முடிவு செய்!'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''லைலாவை நான் காதலிக்கிறேன் என்பது உண்மை தான். ஆனால் புற அழகுக்காக அவளை நான் விரும்பவில்லை. அப்படிப் பார்க்கும்போது நீங்கள் சொல்வது போல் அவளை விடச் சிறந்த அழகிகள் எல்லாம் இங்கு இருக்கிறார்கள். அவளுடைய புற அழகுக்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது. என் கையிலே நான் ஒரு பாத்திரத்தை ஏந்திக் கொண்டிருக்கிறேன். அதன் மூலம் குளிர்ந்த பானத்தை அருந்துகிறேன். குளிர்ந்த பானத்தை நான் விரும்புகிறேன். எனவே அந்தப் பாத்திரத்தையும் விரும்புகிறேன். அந்தப் பாத்திரத்திற்கு நிகரானவள் லைலா. அவளுடைய எண்ணம் எனக்குப் பேரின்பத்தைப் புகட்டுகிறது. அந்தப் பேரின்பத்தை விரும்பும் நான் லைலாவையும் விரும்புகிறேன்.

''ஆனால் நீங்கள் தப்புக் கணக்குப் போடுகிறீர்கள். நீங்கள் என் கையிலிருக்கும் பாத்திரத்தைத்தான் பார்த்திருக்கிறீர்களே தவிர, அதிலுள்ள பானத்தைப் பார்ப்பதில்லை. நான் பருக விரும்பாத பானத்தை நீங்கள் வைரமிழைத்த தங்கப் பாத்திரத்தில் கொடுக்கிறீர்கள். 'இது தங்கத்தாலானது - வைரம் வைத்து இழைத்தது' என்று குறிப்பிடுகிறீர்கள். 'அந்தச் சாதாரணப் பாத்திரத்தைத் தூர எறிந்து விடு!' என்று கூறுகிறீர்கள். இதனால் எனக்கு என்ன லாபம்? எனக்குப் பயன்படக் கூடியது பானம்தானே தவிர பாத்திரமல்ல.''

மஜ்னூன் எந்த நிலையில் இருக்கிறான், அவனுடைய மன நிலை எப்படி இருக்கிறது என்று அவனுடைய நண்பர்களுக்குத் தெரியாது. இதனால் அவனுக்கும் அவர்களுக்குமிடையில் கனத்த திரையொன்று விழுகிறது. இரண்டு சாராரின் கண்ணோட்டங்களுக்கும் மத்தியில் வேறுபாடு தோன்றுகிறது.

ஒரு மனிதன் பத்து நாட்களாகப் பட்டினி கிடக்கிறான். மற்றொருவன் தினம் பத்து வேளைகள் சாப்பிடுகிறான். இந்த இரண்டு பேரும் ரொட்டித் துண்டு ஒன்றைப் பார்க்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களின் கண்ணோட்டங்கள் ஒரே விதமாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது. பின்னவன் ரொட்டித் துண்டின் வெளித் தோற்றத்தை மட்டுமே பார்ப்பான். அவன் கண்களுக்கு வேறு எதுவும் தெரியப் போவதில்லை. ஆனால் முன்னவன் முற்றிலும் மாறுபட்டவன். அந்த ரொட்டித் துண்டில் உயிரோட்டமும் வாழ்வும் இருப்பது அவன் கண்களுக்குத் தெரியும்.

எப்படிப் பார்த்தாலும், வெளித் தோற்றத்தைக் கண்டு திருப்தியடைகிறவர்கள் ஊடுருவிப் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்கிறவர்களை விடத் தாழ்ந்தவர்களே, இதை நீங்கள் எந்தக் கோணத்திலிருந்தும் மறுக்க முடியாது. எனவே புறத்தோற்றத்தைப் பார்க்கும் நீங்கள், அதற்குள் மறைந்திருக்கும் உயிரோட்டத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். ஆனால் இந்த மனப்பான்மை ஏற்பட வேண்டுமானால் உங்களுக்கு அறிவுப் பசி இருக்க வேண்டும். இல்லையேல் உங்களால் புறத்தோற்றம் எனும் வட்டத்துக்கு அப்பால் பிரவேசிக்க முடியாது. ஏனெனில் பசியில்லாதவர்களால் ரொட்டித் துண்டில் மறைந்திருக்கும் உயிரோட்டத்தைப் பார்க்க முடியாது.

உங்கள் கண்ணோட்டம் இப்படி உயர்ந்து விட்டால், அப்புறம் நீங்கள் எதையும் ஊடுருவிப் பார்க்கலாம். உலகிலுள்ள அனைத்திலும் உங்களால் இறைவனைப் பார்க்க முடியும். அவனுடைய பெருமையை எடுத்துரைக்காத எந்தப் பொருளும் கிடையாது என்ற உண்மையை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்வீர்கள். இந்த உண்மை ஒவ்வொரு பொருளிலும் மறைந்திருக்கிறது. அதனை வெளித் தோற்றத்தில் பார்க்க முடியாது. வெளித் தோற்றத்தை மட்டுமே பார்க்கிறவர்களுக்கு இந்த உண்மை வெளிப்படாது. ஏனெனில் தினம் பத்துத் தடவைகள் சாப்பிடுகிறவனுக்கு ரொட்டித் துண்டிலுள்ள உயிரோட்டம் வெளிப்படாது.



உலகில் பல கோடிப் பொருள்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பாத்திரத்திற்கு ஒப்பிடலாம். உலகிலுள்ள அறிவுகள் - கலைகள் அத்தனையும், அந்தப் பாத்திரத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் சித்திரங்களைப் போன்றவை. உங்களுக்கு நன்றாகத் தெரியும்... பாத்திரம் உடைந்து விட்டால், அதிலுள்ள சித்திரங்கள் மறைந்து போய்விடும். அந்தப் பாத்திரத்தில் பழரசம் இருக்கிறது. நீங்கள் பழரசத்தைத் தான் விரும்ப வேண்டுமே தவிர, பாத்திரத்தைப் பொருட்படுத்தக் கூடாது. எந்தப் பாத்திரத்திலும் பழரசம் உண்டு. உலகிலுள்ள எந்தப் பொருளிலும் இறையறிவு உண்டு.

லைலா மீது மஜ்னூன் காதல் கொண்டிருந்தது போல் நீங்கள் இறைவன் மீது காதல் கொண்டிருந்தால்... அவனுடைய எண்ணம் உங்கள் உள்ளத்தை உலுப்பிக் கொண்டிருந்தால், உலகிலுள்ள எந்தப் பொருளிலும் நீங்கள் இறைவனைப் பார்க்கலாம். இறைவனைச் சுட்டிக்காட்டாத எந்தப் பொருளும் உலகில் கிடையாது என்ற தீர்மானம் உங்களுக்கு ஏற்படலாம். உலகிலுள்ள பொருள்களெல்லாம் இறைவனைத் துதித்து வணங்குகின்றன என்னும் உண்மையை நீங்கள் சுத்தமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால், மேலே நான் குறிப்பிட்டது போல், இந்த நிலையை நீங்கள் அடைய வேண்டுமானால், உங்களுக்கும் அறிவுப் பசி இருக்க வேண்டும்; இறைவன் மீது நீங்காத அன்புப் பசி இருக்க வேண்டும். இல்லையேல் எந்தப் பொருளிலும் உங்களால் உயிரோட்டத்தைப் பார்க்க முடியாது. ஏனெனில், பசி எடுக்கு முன் சாப்பிடுகிறவர்களால் பசியின் மகிமையை உணர்ந்து கொள்ள முடியாது.

... மவ்லானா ரூமி தனது நண்பர்களை ஊன்றிக் கவனித்தார்கள்.

''மனிதன் மிக உயர்ந்த சிறப்புக்குத் தகுதியுள்ளவன். எனவே அவனது செயல்கள் எப்போதும் உயர்ந்தவையாகவே இருக்க வேண்டும். எதைக் கண்டாலும் அவன் உட்பொருளைப் பார்க்க வேண்டுமே தவிர, வெளித் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடக் கூடாது!'' என்று அவர்கள் இறுதியாகக் கூறியது மிகத் தெளிவாகக் கேட்டது.

> இறை சிந்தனையில் ஈடுபடுங்கள். கண்களை மூடிக் கொள்ளுங்கள்; காதுகளை மூடிக் கொள்ளுங்கள்; வாயை மூடிக் கொள்ளுங்கள். அப்போது இறைவனின் ஒளி உங்களுக்குத் தெரியும். இல்லையேல் அதற்கு நான் பொறுப்பாளி. — **ஜலாலுத்தீன் ரூமி.**

# வார்த்தையற்ற பேச்சு

மவ்லானா ரூமி ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தார்கள். அறிவுப் பசி கொண்ட நண்பர்களுக்கு இந்த அமைதி பிடிக்கவில்லை. சிறிது நேரம் அவர்கள் பொறுத்துப் பார்த்தார்கள். மவ்லானாவின் மவுனம் கலையவில்லை.

நண்பர்களில் ஒருவர் கனைத்துக் கொண்டார். ''நம்முடைய மவ்லானா அவர்கள் பெரும்பாலான நேரங்களில் மவுனம் சாதிக்கிறார்கள். வாய் திறந்து ஒரு வார்த்தை பேசுவதில்லை'' என்று முணுமுணுத்தார்.

மவ்லானாவின் நிலையில் எந்த மாறுதலும் தோன்றவில்லை.

மவ்லானாவிடமிருந்து அறிவுகளைப் பெறுவதற்காகவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். ஆனால் மவ்லானா அவர்கள் மவுனம் சாதிக்கிறார்கள்'' என்று மீண்டும் அவர் முணுமுணுத்தார்.

மவ்லானா ரூமியின் பார்வை திரும்பிற்று. அவர்கள் பேசுவதற்குத் தயாராகி விட்டார்கள் என்பதற்கு இது அறிகுறி. பொருள் செறிந்த புன்னகையோடு மவ்லானா ரூமி பேசினார்கள்.

நீங்கள் என்னைப் பார்ப்பதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள். இதற்கு உங்கள் எண்ணமே காரணம். என்னைப் பற்றிய எண்ணம் உங்கள் மனத்தில் தோன்றியதும் அது உங்களை என் பக்கம் இழுத்து வருகிறது. எண்ணமில்லாமல் செயல் உருவாவதில்லை. உருவான செயல்கள் அத்தனைக்கும் எண்ணமே அடிப்படைக் காரணம்.

ஆனால் நான் உங்களிடம் பேசுவதுபோல், என்னைப் பற்றிய எண்ணம் உங்களிடம் பேசுவதில்லை: ''நலமாக

இருக்கிறீர்களா?'' என்று கேட்பதில்லை. எனவே பேச்சு மூச்சு இல்லாத வெறும் எண்ணமே உங்களை இங்கு அழைத்து வந்திருக்கிறது.

என்னைப் பற்றிய எண்ணம் உங்களிடம் பேசாமலிருந்த போது, நான் உங்களிடம் பேசாமலிருக்கிறேன் என்பது குறித்து ஏன் சங்கடப்படுகிறீர்கள்? இதை நினைத்துப் பார்க்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

மனதில் தோன்றும் எண்ணங்களை, கருத்துக்களை நாம் வார்த்தைகளால் விளக்குகிறோம். ஆனால் மனதில் தோன்றும் கருத்துக்கள் அனைத்தையுமே வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. எழுத்துக்கும் வார்த்தைக்கும் அப்பாற்பட்ட எத்தனையோ கருத்துக்கள் நம் மனதில் தோன்றுகின்றன. எனவே பேச்சு என்பது எண்ணத்துக்கு நிழல் போன்றது.

எனவே என்னைப் பற்றிய நல்லெண்ணம்தான் உங்களை இங்கு இழுத்து வந்திருக்கிறதே தவிர, நான் பேசும் வார்த்தைகள் அல்ல. இந்த நல்லெண்ணம் மிக முக்கியமானது என்பதையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இந்த நல்லெண்ணம் இல்லையேல், நீங்கள் எந்தத் திருத்தூதரையும் நம்ப மாட்டீர்கள்; எந்தஇறையன்பரையும் மதிக்க மாட்டீர்கள். நம்ப முடியாத பல அற்புதங்களை அவர்கள் நடத்திக் காட்டினாலும், உங்களுக்கு அவர்கள் மீது நம்பிக்கை ஏற்பட முடியாது.

இந்த மன உணர்வுதான் மனிதனை இயக்குகிறது. இது கண்ணால் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடியதல்ல; கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும் பேராற்றல்.

இந்த ஆற்றல் எப்போதும் வேலை செய்து கொண்டிருக்கிறது. இதனால் ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் மானசிகத் தொடர்பு ஏற்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், இதே ஆற்றல் உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றுடனும் தொடர்பு கொள்கிறது.

ஒரு பொருளைப் பற்றிய எண்ணம் உங்களுக்கு ஏற்படும் போது, அதனை அடைய முயற்சி செய்கிறீர்கள். சோலையின் குளிர்ந்த சூழ்நிலை உங்கள் எண்ணத்துக்குப் பலியாகும் போது, விருட்டென்று எழுந்து சோலைக்குப் போகிறீர்கள்.



எண்ணமே செயலை உருவாக்குகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இவ்வளவு போதும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், இந்த எண்ணத்திலேயே ஓர் ஏமாற்றமுண்டு.

உங்கள் எண்ணத்தின் தூண்டுதலால் நண்பர் ஒருவரைப் பார்க்க புறப்பட்ட நீங்கள், அவர் முதல்நாளே வெளியூர் சென்று விட்டார் என்ற செய்தியுடன் திரும்பி வருகிறீர்கள். நன்மை விளையும் எனும் எண்ணத்துடன் ஒரு வேலையைச் செய்த நீங்கள் இறுதியில், ''நான் நினைக்கவில்லை. நிலைமை இப்படித் திரும்பும் என்று நான் நினைக்கவேயில்லை!'' என்று வேதனையோடு கூறுகிறீர்கள்.

இதிலிருந்து, உங்கள் எண்ணமே சில வேளை உங்களை ஏமாற்றுகிறது என்று தெரியவில்லையா? எனவே எண்ணம் என்பது ஓர் இரும்புச் சட்டையைப் போன்றது. அந்தச் சட்டைக்குள் ஒரு மனிதன் ஒளிந்து கொண்டிருக்கிறான். அவனே அந்தச் சட்டையைத் தன் விருப்பப்படி அசைக்கிறான். இதுபோலவே மனிதனின் எண்ணத்திற்குள் பேராற்றல் ஒன்று மறைந்திருக்கிறது. அது அவனுக்கே தெரியாது. அந்த ஆற்றல்தான் எண்ணத்தை தன் விருப்பம்போல் திருப்புகிறது.

இந்தக் கட்டத்தில் நம் சிந்தனை வேறொரு கோணத்திற்குத் தாவுகிறது. உண்மையில் உங்களை இயக்குவது எண்ணமல்ல. எண்ணத்திற்குள் மறைந்திருக்கும் பேராற்றலே உங்களை இயக்குகிறது. உங்கள் எண்ணத்திற்குள் பேராற்றல் ஒன்று மறைந்திருப்பது போல், என் எண்ணத்திற்குள்ளேயும் பேராற்றல் ஒன்று மறைந்திருக்கிறது. உண்மையில் இந்த இரண்டும் ஒன்றுதான். எது உங்களை இயக்குகிறதோ, அதுவே என்னையும் இயக்குகிறது. எது என்னைப் பேச வைக்கிறதோ அதுவே உங்களைக் கேட்க வைக்கிறது. இப்படிப் பார்க்கும்போது நாம் இருவருமே ஒரே பொருளாகி விடுகிறோம். ஏனென்றால் நாமிருவரும் ஒரேயொரு பேராற்றலினால்தான் இயக்கப்படுகிறோம்.

பேச்சை நிறுத்திய மவ்லானா ரூமி, எதிரிலிருந்த நண்பரைத் துளைத்துப் பார்த்தார்கள்.

''நீங்களும் நானும் ஒரே பொருளாகி விட்டபோது உங்களிடம் நான் பேசவேண்டிய தேவைதான் என்ன?''

இப்போது நண்பர்கள் மவுனம் சாதித்தார்கள். மவ்லானா ரூமி புன்னகை புரிந்தார்கள்.

''அப்படியானால் மனிதனை இயக்கும் அந்தப் பேராற்றல் எத்தகையது?''

நண்பர்களின் மவுனம் நீடித்தது. அவர்களில் யாரும் பதில் சொல்லவில்லை. எனவே மவ்லானா ரூமியே விளக்கினார்கள்.

மனிதனை இயக்கும் பேராற்றல் என்று நான் குறிப்பிட்டேனல்லவா? அது மனிதனை மட்டும்தானா இயக்குகிறது? இல்லவேயில்லை. அனைத்தையும் அதுதான் இயக்குகிறது. அது ஒரே ஓர் ஆற்றல்தான். அதற்கு இணையுமில்லை; துணையுமில்லை. என்றாலும் அதன் ஒளி கோடானு கோடிப் பொருள்களில் பிரதிபலிக்கிறது. அந்தப் பேராற்றலினால் தான் எல்லாப் பொருள்களும் உள்ளமைக்கு வந்திருக்கின்றன.

மனிதனின் ஆசைகள் பலதரப்படுகின்றன. ஒருவன் ரொட்டியை விரும்புகிறான். மற்றொருவன் சோற்றை விரும்புகிறான். இன்னொருவன் ரவாப் பாயசத்தை விரும்புகிறான். இப்படி எத்தனை விதமான ஆசைகள் இருந்தாலும் அவற்றிற்கு அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்: பசி... பசி இல்லையேல் இந்த ஆசைகள் எதுவும் எஞ்சி நிற்கப் போவதில்லை. எனவே மேற்குறிப்பிட்ட ஆசைகள் அத்தனைக்கும் பசியே அடிப்படைக் காரணம்.

இதுபோலவே, உலகில் கோடானு கோடிப் பொருள்கள் இருந்தாலும், அவை அத்தனைக்கும் இறைவனே அடிப்படைக் காரணம். அவனுடைய சக்திக் கரங்களே அனைத்தையும் உருவாக்கியிருக்கின்றன. எனவே உங்களுக்குத் தேவையானது தெளிவான கண்ணோட்டம். அது இருந்தால் போதும். உலகிலுள்ள எந்தப் பொருளையும் பார்த்து அதனைப் படைத்த இறைவனைத் தெரிந்து கொள்ளலாம். இப்படித்தான் சிந்தனையாளர்கள் இறைவனைத் தெரிந்து கொண்டார்கள்.



பலகோடிப் பொருள்களைப் படைத்த இறைவன் மனிதனுக்குப் பெரியதொரு சோதனையை ஏற்படுத்தியிருக்கிறான். தனித்த மரத்தைப் பார்த்து, ''ஒன்று'' எனக் கூறும் மனிதன் வனத்தைப் பார்த்து, ''அங்கு பல மரங்கள் இருக்கின்றன'' என்று குறிப்பிடுகிறான். தனி மனிதனை ''ஒருவன்'' என்று குறிப்பிடும் நாம், ஒரு கூட்டத்தைப் பார்த்து ''பல மனிதர்கள்'' என்று சுட்டிக் காட்டுகிறோம்.

இப்படி மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளும் மனிதன், அத்தனைக்கும் மூலமான ஏக இறைவனை மறந்து விடுகிறான். அவன் பார்க்கும் பொருள்கள் எத்தனை கோடியாக இருந்தாலும், அவை அனைத்திலும் இறைவன் மறைந்திருக்கிறான். படைப்புகளில் அவற்றின் தனித் தன்மைகளைப் பார்ப்பது பாமரர்களின் கண்ணோட்டம். படைப்புகளில் இறைவனைப் பார்ப்பது மெய்ஞ்ஞானிகளின் கண்ணோட்டம்.

இந்தக் கண்ணோட்டத்தை வைத்துத்தான் ஓர் அரசன் செயல்பட்டான். குறிப்பிட்ட ஒரு வீரனுக்கு அந்த அரசன் பல்வேறு சலுகைகள் கொடுத்தான். பத்துப் பேருக்குக் கொடுக்கக் கூடிய உணவை அந்த ஒரே ஒரு வீரனுக்கு அளித்தான்.

இதர ராணுவ வீரர்கள் இதை மறுத்தார்கள். ''எங்களைப் போன்றவனே அவன். எனவே எங்களுக்குக் கிடைக்காத எந்தச் சலுகையும் அவனுக்குக் கிடைக்கக் கூடாது.''

அரசன் சுத்தமாகப் பதிலளித்தான்.

''என் கண்ணோட்டத்தை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே நான் நினைக்கிறேன். கொஞ்சம் பொறுத்துப் பாருங்கள்; உண்மை தெரியும்.''

சிறிது நாட்களில் யுத்தம் வந்தது. பெரும்பாலான வீரர்கள் போர் முனையிலிருந்து ஓடி வந்து விட்டார்கள். ஆனால் அந்த ஒரே வீரன் கொடிய எதிர்ப்புகளிடையே போராடிக் கொண்டிருந்தான்.

போர் முனையிலிருந்து ஓடி வந்திருந்தவர்களைப் பார்த்து அரசன் கூறினான்:

''இப்போதுதான் சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இப்போது நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று பார்த்தீர்களா? அவன் ஒரே யொரு வீரனல்ல. அவனுடைய நெஞ்சுக்குள் உடலுக்குள் பல வீரர்கள் மறைந்திருக்கிறார்கள். இதனால் தான் அவனுக்கு நான் சலுகைகள் கொடுத்தேன்.''

இங்கு அரசனின் கண்ணோட்டத்துக்கும் வீரர்களின் கண்ணோட்டத்துக்கும் முரண்பாடு தோன்றுவது போல், மெய்ஞ்ஞானிகளின் கண்ணோட்டத்துக்கும் பாமரர்களின் கண்ணோட்டத்துக்கும் முரண்பாடு தோன்றுகிறது. கோடிக் கணக்கான பொருள்களில் மெய்ஞ்ஞானிகள் ஒரே பொருளைப் பார்க்கிறார்கள். பாமரர்கள் அந்த ஒரே ஒரு பொருளை மறந்து விட்டு, கோடிக்கணக்கான பொருள்களின் வெளித் தோற்றங்களைப் பார்க்கிறார்கள்.

மெய்ஞ்ஞானிகளின் கண்ணோட்டம் உங்களுக்கு வர வேண்டுமானால் நீங்கள் உங்கள் சிந்தனைத் திறனைப் பெரிதும் வளர்க்க வேண்டும். மனிதனுக்கும் மற்றப் படைப்புகளுக்குமிடையிலுள்ள ஒரே திரை இதுதான். எனவே இதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மகத்தானது. அத்துடன், உங்கள் குறிக்கோளுக்குத் துணை செய்யக்கூடிய நண்பர் ஒருவரையும் நீங்கள் தேடிப் பிடிக்க வேண்டும். அவர் சிந்தனைத் தெளிவுள்ளவராகவும் செயல் திறன் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

சிந்தனையற்றவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். இதனால் உங்கள் சிந்தனையில் கோளாறு ஏற்படக் கூடும். மனிதனின் சிந்தனை சூழ்நிலையையொட்டியே வளர்கிறது. சிந்திக்காமல் செயல்படுகிறவர்களுடன் நீங்கள் தொடர்ந்து பழகினால், அப்புறம் சிந்தனையின் சிறப்பே உங்களுக்குத் தெரியாமற் போய்விடும்.



இந்தச் சிந்தனையாற்றல் கண்ணுக்குத் தெரியக்கூடியதல்ல. ஏனெனில் அது சடப் பொருளல்ல. மனிதன் என்னும் சடப் பொருளில்தான் இந்த ஆற்றல் இருக்கிறது. என்றாலும் இதனைச் சடப் பொருள் என்று நிச்சயமாகக் குறிப்பிட முடியாது. முழுமையான உடலுடன் கூடிய சிலருக்குச் சிந்தனையே இருப்பதில்லை.

இங்கு நாம் பைத்தியக்காரன் ஒருவனை உவமானத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். அவனை நாம் 'மனிதன்' என்றுதான் சொல்லுகிறோம். அவனுக்கு கை, கால்கள், தலை, வயிறு முதலான எல்லா உறுப்புகளும் இருக்கின்றன. என்றாலும் அவனிடம் சிந்தனையாற்றல் கிடையாது. எனவே அவனுடைய செயல்கள் பெருமைக்கு உரித்தாவதில்லை.

இதிலிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் மரியாதை கண்ணுக்குத் தெரியாத ஓர் ஆற்றலிலிருந்துதான் வருகிறது என்று தெரிகிறதல்லவா? இப்படிப் பார்க்கும் போது, சடத்தைவிட அதனுள் மறைந்திருக்கும் ஆற்றலுக்குப் பெருமதிப்புக் கிடைக்கிறது; வெளித் தோற்றத்தை விட அதற்குள் மறைந்திருக்கும் உண்மைக்குப் பாராட்டுக் கிடைக்கிறது.

எனவே மீண்டும் கூறுகிறேன் - நீங்கள் வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடக் கூடாது; வெளித் தோற்றத்திற்குள் மறைந்திருக்கும் ஆற்றலை ஊடுருவிப் பார்க்க வேண்டும்.

மனிதனுக்குக் கண்கள், காதுகள் முதலான புலன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் துணை கொண்டு அவன் வெளியுலகத்துடன் தொடர்பு கொள்கிறான். அந்தப் புலன்கள் அனைத்திலுமே ஓர் ஆற்றல் உண்டு. அந்த ஆற்றல் இல்லையேல் புலன்களுக்கு மதிப்பில்லை. இந்தப் புலன்கள்

இல்லாவிட்டாலும் அந்த ஆற்றல் இருக்கத்தான் செய்யும். புலன்களை விளக்குகள் என்று குறிப்பிடலாம். இந்த விளக்குகள் ஓரளவு பயன்படலாமே தவிர, அவற்றை வைத்து உலகத்தையே ஒளிமயமாக்கிவிட முடியாது. சூரியனுக்கு முன்னால் மெழுகுவர்த்தி ஒன்றைத் தூக்கிப் பிடிக்கும் நீங்கள், ''இந்த மெழுகுவர்த்தியின் துணை கொண்டே நான் சூரியனைப் பார்க்கிறேன். இந்த மெழுகுவர்த்தி இல்லையேல் சூரியனுமில்லை'' என்று கூறினால் அது அறிவுடைமை ஆகுமா?

நீங்கள் மெழுகு வர்த்தியைக் கொண்டு வந்தாலும் இல்லாவிட்டாலும், சூரியன் எப்போதும் ஒளி தந்து கொண்டிருக்கிறது. அது மெழுகுவர்த்திக்குக் கட்டுப்பட்டதல்ல. இது போலவே உங்கள் புலன்களை இயக்கும் ஆற்றல் புலன்களுக்குக் கட்டுப்பட்டதல்ல. புலன்கள் இல்லாவிட்டாலும் அந்த ஆற்றல் நிலைத்து நிற்கும்.

உலகிலுள்ள பொருள்கள் அத்தனையும் வெளித்தோற்றத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த வெளித் தோற்றம் என்றைக்கும் அழிந்து போகலாம். அதனைச் செல்லாக் காசுக்கு ஒப்பிடலாம்; அல்லது முலாம் பூசிய பித்தளைப் பொருளுக்கு ஒப்பிடலாம். சிறிது நாட்களில் அதன் உண்மைத் தோற்றம் வெளியில் வந்து விடும். தவிர, ஒரு பொருளில் இருக்கும் தோற்றம் அந்தப் பொருளுக்கே சொந்தமானதல்ல; அது வெளியிலிருந்து வந்திருக்கும் இரவல் சரக்கு. எனவே அது என்றாகிலும் ஒருநாள் அழிந்துதான் ஆகவேண்டும்.

மவ்லானாவின் பேச்சு நின்றுவிட்டது. ஆனால் அவர்களின் சிந்தனை நிற்கவில்லை என்பதை அவர்களின் பார்வை காட்டிற்று. சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் அவர்களின் குரல் அமைதியாக ஒலித்தது.

''எனவே உங்களை நீங்களே உற்றுப் பாருங்கள். இறைவனின் படைப்புகளில் அற்புதமானவன் மனிதன். மனிதனை நன்கு ஆராய்கிறவர்களால் இறைவனை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும். உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்; மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாருங்கள். இறுதியில் நீங்கள் இறைவனைப்பற்றி ஓரளவேனும் தெரிந்து கொள்ளலாம். பாமரர்களுக்கு இது மிகச் சிரமம்தான் என்றாலும், மெய்ஞ்ஞானிகள் இப்படித்தான் செயல்பட்டார்கள்.



''உங்களை நீங்களே உற்று பார்ப்பதன் மூலம் நீங்கள் இறைவனைத் தெரிந்து கொண்டால், அப்புறம் இறைவனைப் பற்றிய அறிவு உங்கள் நெஞ்சத்தில் வளர ஆரம்பித்து விடும். அந்தப் பேரொளியைத் தாங்குவதற்குரிய மனப்பக்குவம் உங்களுக்கு வந்துவிடும்.

''இந்த மனப் பக்குவம் பெற்றவர்கள்தாம் 'மெய்ஞ்ஞானிகள்' என்ற பெயருக்குத் தகுதியுள்ளவர்கள். மேலே நான் குறிப்பிட்டதுபோல், உலகிலுள்ள அனைத்தும் அவர்களிடம் இறைவனின் பெருமையைப் பேசுகின்றன; ஏகத்துவத்துக்கு விளக்கம் கொடுக்கின்றன. இந்தப் பேச்சு மனிதனின் பேச்சுக்கு முற்றிலும் மாறுபட்டது. மனிதனின் பேச்சு, வார்த்தைகளால் உருவாகிறது. ஆனால் உலகிலுள்ள கோடி கோடியான வாயற்ற பொருள்களின் பேச்சுக்கு வார்த்தையும் கிடையாது; ஒலியும் கிடையாது.

''ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல், வார்த்தைகளால் உருப்பெரும் பேச்சு முழுக் கருத்தைக் காட்டாது. ஆனால் வார்த்தையற்ற பேச்சு முழுக் கருத்தையும் தெரிவிக்கும் ஆற்றல் படைத்தது. இதனால்தான் பள்ளியில் படித்துத் தெளிவு பெறுகிறவர்களின் அறிவை விட இறை சிந்தனையில் ஈடுபட்டுத் தெளிவு பெறுகிறவர்களின் அறிவு சிறந்து விளங்குகிறது. முன்னது சுருக்கமானது. பின்னது எல்லையற்றது; அகிலத்தையே அளந்து பார்த்து இறைவனை அணுகக் கூடியது.''

# உலக மதங்கள்

ஒரு சமயம் மவ்லானா ரூமிக்கும், அவர்களின் நண்பர் ஒருவருக்குமிடையில் உரையாடல் நடந்தது. அ(த்)தாபேக் என்ற அந்த நண்பர் மவ்லானா ரூமியின் அன்பைப் பெற்றிருந்தார்.

''என் குமாரியைத் தார்தாரியர்களில் ஒருவருக்கு மணம் முடித்துக் கொடுத்து விட்டால், அவர்களுக்கும் நமக்குமிடையிலுள்ள தகராறுகள் எல்லாம் தீர்ந்து போகும். இருவரது மதமும் ஒன்றாகிவிடும்'' என்றார் அ(த்)தாபேக்.

மவ்லானா ரூமி மறுத்தார்கள்.

''இது என்றைக்கும் சாத்தியமில்லை. உலகிலுள்ள மதங்களை எல்லாம் ஒன்றுபடுத்துவது நடக்காத காரியம். எந்தக் காலத்தில் இப்படி எல்லா மதங்களும் ஒன்றுபட்டு இருந்திருக்கின்றன? ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்குமுள்ள பகைமையுணர்வு ஆரம்பத்திலிருந்தே வந்திருக்கும் ஒன்று. எனவே இது வீண் முயற்சி!''

சிறிது நாட்களுக்குப் பின்னர் அ(த்)தாபேக்கின் குமாரர் மவ்லானாவைப் பார்க்க வந்தார். அவரைக் கண்டதும் மவ்லானா ரூமிக்கு மேற்குறிப்பிட்ட உரையாடல் நினைவுக்கு வந்துவிட்டது. அவர்கள் அந்த இளைஞரைப் பார்த்துக் கூறினார்கள்;

உங்கள் தந்தையை நான் பாராட்டுகிறேன். அவர் எந்நேரமும் இறைப் பணியிலேயே ஈடுபட்டிருக்கிறார். அவருக்கு மார்க்கத்தில் ஆழமான நம்பிக்கை உண்டு. இது அவருடைய வார்த்தைகளில் நன்றாகத் தெரிகிறது. ஒருசமயம் அவர் இரண்டு மதங்களை ஒன்றுபடுத்துவது பற்றி யோசனை கேட்டார். 'அது என்றைக்கும் சாத்தயமில்லை!' என்று நான் சொன்னேன். உலக மதங்களுக்கிடையே வேறுபாடு இருக்கக்



கூடாது என்று அவர் நினைத்தார். ஆனால் வேறுபாடு இருக்கத்தான் செய்யும் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

உலக வரலாற்றில் எந்தக் காலத்திலேனும் இப்படி எல்லா மதங்களும் ஒன்றுபட்டு இருந்ததுண்டா? கிடையாது. ஒரு மதத்துக்கும் மற்றொரு மதத்துக்கும் நடந்த யுத்தங்களை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். எனவே எல்லா மதங்களையும் ஒன்றுபடுத்த முற்படுவது அறியாமையாகும். மறுமையில் இந்த வேறுபாடு கிடையாது. அங்கு இந்த ஒற்றுமையை நீங்கள் பார்க்கலாம். ஆனால் அதனை இம்மையில் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. இம்மையை பொறுத்த மட்டில் இது நடக்காத காரியம்.

இங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வோர் ஆசையுண்டு. ஒவ்வொருவனும் ஒவ்வொரு வழியைப் பின்பற்றுகிறான். ஒவ்வொரு மனிதனும் தான் செல்லும் வழியை உயர்த்திக் கணிக்கிறான். இந்தக் குணங்களை / எல்லாம் எப்படித்தான் ஒன்றுபடுத்துவது?

இன்னும் கொஞ்சம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், மனிதனின் உள்ளத்தில் விசித்திரமானதொரு துடிப்பு இருப்பதைக் காணலாம். இந்தத் துடிப்பை நீங்கள் சாதாரணமாக எல்லோரிடமும் காணலாம். அவனுடைய முயற்சிகள் அத்தனைக்கும் இந்தத் துடிப்பு ஆணிவேர் போன்றது.

ஒருவன் பெண்களைத் தொடர்ந்து அலைகிறான். மற்றொருவன் பணத்துக்காகப் பாடுபடுகிறான். வேறொருவன் பதவிக்கு முயற்சி செய்கிறான். இன்னொருவன் அறிவுப் பாதையில் நடக்கிறான். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் இன்பம் காண்கிறார்கள். தாம் ஈடுபட்டிருக்கும் வேலையை அவர்கள் வாழ்வின் குறிக்கோள் என்று நினைக்கிறார்கள்.

முக்கியமானதொரு பொருளைத் தவறவிட்ட ஒருவன் எந்த நிலையில் இருப்பானோ அந்த நிலையில்தான் மக்கள் இருக்கிறார்கள். காணாமற் போன அந்தப் பொருள் அவனை

வாட்டுகிறது; அவனுடைய அமைதிக்குக் குழி தோண்டுகிறது. அதனைத் திரும்பப் பெறுவதற்காக அவன் மேலும் கீழும் பார்க்கிறான்; இடமும் வலமும் தேடுகிறான். இப்போது அவனுடைய மனதிலிருக்கும் துடிப்பு, அந்தப் பொருள் கிடைக்கும் வரை நீடிக்கிறது. அது கிடைத்ததும் அந்தத் துடிப்பு மறைந்து போய் விடுகிறது. அப்புறம் அவன் மேலேயும் பார்ப்பதில்லை; கீழேயும் பார்ப்பதில்லை. இந்தத் துடிப்பு நீடித்தால் இறுதி வரை அவனுடைய மனதில் புரட்சி நீடிக்கும். இதனால், அவன் இறுதி வரை தேடிக் கொண்டேயிருப்பான்.

இதுபோலவே மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் ஆழமான மனத் துடிப்புக்குப் பலியாகிறார்கள். தம் முயற்சியில் தோல்வி காணும் போதெல்லாம் அவர்கள், "இறுதி வெற்றி எனக்குத்தான். இன்னும் நன்றாக நான் பிரவேசித்துப் பார்க்க வேண்டும்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். கடைசியில் தான் அவர்கள் தேடும் பொருள் கிடைக்கிறது. அதுவரை அவர்கள் பின்பற்றியது நேரான வழியல்ல என்று அப்போது தான் அவர்களுக்குத் தெரிகிறது.

மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் அத்தனை பேரும் இறைவனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பின்பற்றும் மதங்கள் மாறுபட்டாலும், அவர்கள் தேடிக் கொண்டிருக்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான்.

இந்த முயற்சியில் வெற்றியடைவது மறுமையில் தான் சாத்தியம். எனவே அதுவரை உலகத்திலுள்ள மதங்களை நிச்சயமாக ஒன்றுபடுத்த முடியாது. ஏனெனில் ஒவ்வொருவனும் ஒவ்வொரு வழியில் இறைவனைத் தேடிக் கொண்டிருக்கிறான்; தான் செல்லும் வழியை உயர்ந்தது என்று கருதுகிறான். இப்படித் தேடித் திரிகிறவர்கள் அத்தனை பேரும் இறைவனைக் கண்டுபிடித்து விட்டால் பேச்சேயில்லை. ஆனால் இதற்கு இம்மையில் இடமேயில்லை.

ஆனால் மறுமையைப் பொறுத்த வரையில் இது சாத்தியம்தான், அங்கு எந்த வேற்றுமையும் இருக்கப் போவதில்லை. மனிதனின் மரணத்திற்குப் பிறகு ஏற்படப் போகும் இந்தச் சூழல் இம்மையின் சூழலுக்கு முற்றிலும் மாறுபட்டது. தேடப்பட்ட பொருள் கிடைத்ததும் ஒரு மனிதனின் நிலை எப்படியிருக்குமோ அப்படித்தான் மறுமையில் மக்களின் நிலை இருக்கும். ஏனெனில், அவர்கள் வாணாள் முழுவதும் தேடிக் கொண்டிருந்த ஒன்று கிடைத்து விட்டது.



அங்கு எல்லோருடைய எண்ணமும் கண்ணோட்டமும் ஒரேவிதமாக இருக்கும். ஒரு விருந்தில் கலந்து கொள்கிறவர்கள் எல்லோரும் ஒரே விஷயத்தைப்பற்றிப் பேசுவதுபோல், மறுமையில் மக்களின் உரையாடல் ஒரே விஷயத்தைப் பற்றியதாகவே இருக்கும். இந்தக் கட்டத்தில் வேற்றுமை ஏற்படுவதற்கு வழியில்லை.

இந்தத் தீர்க்கக் கண்ணோட்டம் மறுமையில்தான் கிடைக்கும் என்றாலும், மெய்ஞ்ஞானிகள் சிலர் இந்தக் கண்ணோட்டத்தை இம்மையிலேயே பெற்றுக் கொள்கிறார்கள். மறுமையில் ஒரு மனிதன் பார்க்கக் கூடிய அனைத்தையும் அவர்கள் இம்மையில் இருந்து கொண்டே பார்க்கிறார்கள். மரணத்திற்குப் பிறகு ஏற்படும் தெளிவு அவர்களுக்கு உலக வாழ்விலேயே கிடைத்து விடுகிறது.

இவர்களின் நம்பிக்கை உறுதியானது; எந்தப் புயலுக்கும் அசையாதது. இதுபோன்ற நம்பிக்கைதான் அலியாரிடம் இருந்தது. இதனை அவர்களின் கருத்து ஒன்று தெளிவு படுத்துகிறது.

"மறுமைக்கும் இம்மைக்குமிடையில் ஒரு திரையுண்டு. இந்தத் திரை கிழித்தெறியப்பட்டாலும், என் நம்பிக்கை அதிகப்படப் போவதில்லை."

இறைவனின் அன்பைப் பெற்ற நல்லடியார்கள் இப்படித்தான் இருந்தார்கள். எப்போதும் இறைவனை மனதில் வைத்துப் போற்றும் அவர்கள், மற்றவர்களுக்குத் தெரியாத பல உண்மைகளுக்கு உரிமை பெற்றவர்கள்.

உலக மதங்கள் அத்தனையும் ஏதேனும் ஒரு விதத்தில் அறிவுரைகளையே கொடுக்கின்றன. என்றாலும் இறைவனிட மிருந்து மானசீகமாக மனிதனுக்குக் கிடைக்கும் அறிவு மகத்தானது; அதன் சிறப்பு மறுக்க முடியாதது; அதன் சக்தி அனைத்தையும் ஆட்கொள்ளக் கூடியது.

அறிவுக்கு இறைவனே அதிகாரி. அவனிடமிருக்கும் அறிவு எல்லையற்றது. அதனை முழுக்க முழுக்க ஒரு மனிதனால் அடைய முடியாது. மருந்துக் கடைக்காரன் ஒருவன் உங்கள் தேவையை உணர்ந்து சிறிதளவு மருந்து கொடுப்பது போல், எல்லாம் வல்ல இறைவன் மனிதனின் தேவையை உணர்ந்து அறிவைக் கொடுக்கிறான். மருந்துக் கடைக்காரன் தன்னிடமிருக்கும் மருந்துகளை எல்லாம் உங்க ளிடமே ஒப்படைப்பதனால், நீங்கள் எடுத்துச் சென்றிருக்கும் பாத்திரம் தாங்காது. இதுபோலவே, தன்னிடமுள்ள அறிவுகள் அனைத்தையும் இறைவன் உங்களுக்குக் கொடுப்பதானால், உங்கள் நெஞ்சம் தாங்காது.

இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாத சிலர் பெருமா னாருக்கு எதிராக வினா எழுப்பினார்கள்.

''முஹம்மது நபிக்குத் திருக்குர்ஆன் வார்த்தை வார்த்தை யாக ஏன் வரவேண்டும்? அத்தியாயம் அத்தியாயமாக ஏன் வரக்கூடாது?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

பெருமானார் பதிலளித்தார்கள்:

''இந்த மூடர்கள் என்ன செய்கிறார்கள்? திருக்குர்ஆன் சிறுகச் சிறுகத்தான் வரவேண்டும். முழுக் குர்ஆனும் ஒரே வேளையில் எனக்குக் கொடுக்கப்பட்டால், அதன் தெய்வீக ஒளியில் நான் கரைந்து போய்விடுவேன்!''

மெய்ஞ்ஞானிகளுக்கு ஒரே ஒரு வார்த்தை போதுமானது. அதை வைத்து அதற்குப் பின்னாலுள்ள அனைத்தையும் அவர்கள் உணர்ந்து கொண்டு விடுவார்கள். அவர்களுக்கு விரிவுரை தேவையில்லை.



ஒரு மனிதன் நாலு பேருக்கு மத்தியில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறான். அந்தக் கூட்டத்தில் நீங்களும் ஒருவர். அவன் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை விளக்குகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தச் சம்பவத்தில் நீங்கள் பங்கு பெற்றிருந்தால், அவன் கூறும் முதல் வாக்கியத்திலிருந்தே நீங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டு விடலாம். உங்களைப் பொறுத்த வரையில் அவன் கொடுக்கும் விரிவுரை வீணானது. இது உங்களுக்குத் தான் சாத்தியமே தவிர, மற்றவர்களுக்கு அல்ல.

இதுபோலத்தான் மெய்ஞ்ஞானிகள் ஒரே ஒரு வார்த்தை யில் அகிலத்தையே தெரிந்து கொள்கிறார்கள்.

சாதாரணமாக மனிதனின் அறிவு பலதரப்படுகிறது. அவன் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் இந்த வேற்றுமை இருக்கத்தான் செய்யும். சிலர் ஒரே துளியை வைத்துத் திருப்தியடை கிறார்கள். வேறு சிலருக்குச் சமுத்திரமே திருப்தியைக் கொடுப்பதில்லை. இதுவும் மனக் கொந்தளிப்பி னால்தான் உருப் பெருகிறது. இந்தக் கொந்தளிப்பு இல்லை யேல் அறிஞர்களின் முயற்சியில் உயிர் இருக்காது. இந்தக் கொந்தளிப்புதான் மஜ்னூனையும் பர்ஹாதையும் உந்தித் தள்ளிற்று,

— மவ்லானா ரூமி சிறிது நேரம் பேச்சை நிறுத்தினார் கள். அ(த்)தாபேக்கின் குமாரர் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டி ருந்தார். அவரது நெற்றியில் சிந்தனைக் கோடுகள் தெளிவாகத் தெரிந்தன. மவ்லானாவின் குரல் மீண்டும் பேசிற்று:

''உலகிலுள்ள மதங்கள் குறித்து எண்ணிப் பார்த்து நீங்கள் குழம்ப வேண்டியதில்லை. மதத்துக்கு மதம் வேறுபாடு இருக்கிறதா? அது எப்போதும் இருக்கத்தான் செய்யும். இதனை உங்களாலோ என்னாலோ மாற்ற முடியாது. ஒரே குறிக்கோளுக்குப் பல வழிகள். அந்த வழிகளில் சிறந்தது உங்களிடம் இருக்கிறது. அதனை முறைப்படி பின்பற்றுங்கள்.

இவ்வளவு போதும். அந்த வேறுபாடுகளை எல்லாம் அழிக்க நினைத்தால், அது உலகில் சாத்தியமில்லை!''

நான் ஒரு சிரிக்கும் தோட்டம். என்னைச் சுற்றியிருக்கும் சுவர்களில் கரடுமுரடான கற்கள் காட்சியளிக்கின்றன. இந்த வழியில் செல்கிறவர்கள் சுவர்களை மட்டுமே பார்க்கிறார்கள். அவற்றின் கொடூரத் தோற்றத்துக்கு விளக்கம் கொடுக்கிறார்கள். சுவர்களுக்குள் அடைபட்டிருக்கும் தோட்டத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. எனவே அவர்கள் தாராளமாக இகழட்டும். இதைப் பார்க்கும் தோட்டம் ஏன் கோபப்பட வேண்டும்? — **ஜலாலுத்தீன் ரூமி**

# வெளித் தோற்றம்

**வழக்கப்படி** பர்வானா உள்ளே வந்தார். மவ்லானா ரூமிக்கு எதிரில் அமர்ந்த அவர் அமைதியுடன் காணப்பட்டார். நன்றி நிறைந்த பார்வை ஒன்றை வீசிய அவர் மெதுவாகப் பேசினார்.

''மவ்லானா அவர்கள் எனக்குக் காட்டும் கண்ணியத்தைப் பார்த்து என் உள்ளம் பரவசப்படுகிறது. இத்தனை மதிப்புக்கு நான் 'உரித்தாக முடியும் என்று நான் நினைத்தும் பார்க்கவில்லை; அப்படி ஓர் எண்ணம் என் நெஞ்சத்தில் தோன்றியதேயில்லை. கைகளைக் கட்டிக் கொண்டு இரவும் பகலும் தங்களுக்கு முன்னால் நான் நிற்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது நான் தங்களுக்கு முன்னால் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறேன். தாங்கள் கொடுக்கும் கண்ணியத்தை என்னால் எப்படித்தான் வருணிக்க முடியும்!''

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ''இதற்கெல்லாம் உங்கள் மனதில் பொங்கிக் கொண்டிருக்கும் புனித உணர்வுதான் காரணம்!'' என்று கூறி ரூமி தொடர்ந்து விளக்குகிறார்கள்:

உங்களுக்கு அரசாங்கத்தில் இருக்கும் மதிப்பு மகத்தானது. நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்பும் மகத்தானதுதான். ஆனால் நீங்கள் அடைந்திருக்கும் பதவி உங்கள் மனதில் பெருமையைத் தோற்றுவிக்கவில்லை. நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதை உணர்கிறீர்கள். இந்த வகையில் உங்களுக்கு உதவி செய்ய என் மனம் நாடுகிறது. இதனால் தான் உங்களுக்கு நான் கண்ணியம் கொடுக்கிறேன்.

நீங்கள் செய்யக்கூடிய காரியங்களை மார்க்கத்துடன் சம்பந்தமற்றவை என்றோ ஆத்மீகத்துடன் சம்பந்தப்படாத

வெளித் தோற்றங்கள் என்றோ என்னால் சொல்ல முடியாது. உண்மையில் வெளித் தேற்றத்திற்கும் ஓரளவு மதிப்பு இருக்கத் தான் செய்கிறது. இந்த வெளித் தோற்றத்திற்குள்தான் உட்பொருள் மறைந்திருக்கிறது. உடல் இல்லையேல் உயிரை உங்களால் கண்டுபிடிக்க முடியாது. எனவே உயிருக்கு முக்கியத்துவம் இருப்பது போல் உடலுக்கும் முக்கியத்துவம் இருக்கிறது.

உலகில் மனிதன் செய்ய வேண்டிய காரியங்கள் அத்தனைக்கும் அவன் மனம்தான் அடிப்படைக் காரணம் என்றாலும், அவனுக்கு உடலும் தேவைதான். உடல் இல்லையேல் அவனால் செயலாற்ற முடியாது. உருவமற்ற மனிதனை உங்களால் என்றைக்கும் கண்டுபிடிக்க முடியாது.

மனிதனின் உள்ளத்தை ஒரு வித்துக்கு ஒப்பிடலாம். ஒரு வித்தை நீங்கள் மண்ணில் புதைத்து விட்டால் அது தானாகவே வளர்ந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. அது வளரக்கூடியதுதான் என்றாலும், அதன் வளர்ச்சிக்குரிய தடைகள் களைந்தெறியப்பட வேண்டும். இல்லையேல் அது என்றைக்கும் வளரப் போவதில்லை.

தடைகள் அனைத்தையும் களைந்தெறிந்த பின்னர் விதைக்கப்படும் வித்து, முளைவிட்டு வளர்ந்து பெரு மரமாகி விடுகிறது. வித்து எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது அது வளர்வதற்குரிய சூழ்நிலை.

எனவே, வெளித் தோற்றம் என்பதும் அவசியமானது தான். இதனை எடுத்த எடுப்பில் யாரும் மறுத்துவிட முடியாது.

வெளித்தோற்றம், உட்பொருள் என்று இரண்டு வகை இருப்பது போல் - உலகத்திலும் இரண்டு வகை உண்டு. ஒன்று, உங்கள் புலன்களுக்கு அடிமைப்பட்டது. இதனை உங்கள் புலன்களே நிரூபித்துக் காட்டுகின்றன. மற்றொன்று உங்களுக்குத் தெரியாதது; உங்கள் புலன்களுக்குப் புலப்படாதது. இதைப் பெரும்பாலோர் நம்புவதில்லை. ஏனெனில் இந்த உலகம் உங்கள் புலன்களுக்கு அடிமைப்பட்டதல்ல.



இதனை மெய்ஞ்ஞானிகள் 'மறுமை' என்றும் 'ஆத்மீக உலகம்' என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இம்மையில் உங்களை வாழவைத்திருக்கும் இறைவன், மறுமையை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக எத்தனையோ விதமான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கின்றான். இம்மையை வெளித்தோற்றம் என்றால் மறுமையை உட்பொருள் என்று சொல்லலாம். இம்மையைவிட மறுமையே சிறந்தது என்றாலும், இம்மையையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஏனெனில் இம்மையிலிருந்துதான் நாம் மறுமைக்குச் செல்கிறோம்.

இம்மையையும் மறுமையையும் படைத்த இறைவன் முன்னதைத் தெளிவாகக் காட்டியிருக்கிறான்; பின்னதைத் திரைபோட்டு மறைத்து வைத்திருக்கிறான். அது திரைக்குப் பின்னால் மறைந்திருக்கும் வாழ்வே தவிர, உள்ளமைக்கு வராத ஒன்றல்ல. இம்மையையும் மறுமையையும் இறைவன் ஏக காலத்தில் தெளிவுபடுத்தியிருந்தால் உலகில் நாத்திக வாதத்திற்கே இடமில்லாமற் போயிருக்கும். ''கண்ணுக்கு முன்னாலிருக்கும் இம்மையைத்தான் நாங்கள் நம்புகிறோம். அதற்கு அப்பால் மறுமை என்று ஒன்று கிடையாது'' என்று யாராலும் வாதாட முடியாமற் போயிருக்கும். ஆனால் இறைவன் அப்படிச் செய்யவில்லை. வேண்டுமென்றே மறுமையை மறைத்து வைத்திருக்கிறான்.

தலைசிறந்த சித்திரக்காரன் ஒருவன் ஒரு சித்திரத்தை உருவாக்குகிறான். அதுபோன்ற பல சித்திரங்களைத் தன்னால் உருவாக்க முடியும் என்பதைக் காட்டுவதற்காகவே அவன் இப்படிச் செய்கிறான். இந்த விதத்தில் அந்தச் சித்திரம் ஒன்றே போதுமானது... அவனால் அது போன்ற பல சித்திரங்களைத் தீட்ட முடியும் என்பதற்கு. சித்திரக் கலையில் அவனுக்கு இருக்கும் திறமையைக் காட்டுவதற்கு அந்த ஒரே சித்திரம் போதுமானது. தன் கற்பனையில் தோன்றியிருக்கும் சித்திரங்களை எல்லாம் அவன் உருவகப்படுத்திக் காட்டத் தான் வேண்டும் என்பது கிடையாது. அவன் தீட்டிய சித்திரம்

பகிரங்கமாகத் தெரிகிறது. அவன் தீட்ட நினைத்திருக்கும் சித்திரம் மற்றவர்களின் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக் கிறது.

இம்மை என்னும் சித்திரத்தைப் பார்த்து மறுமை எனும் சித்திரத்தை நம்புகிறவர்கள் சிலர். இவர்களை மெய்ஞ்ஞானி கள் என்று தாராளமாகக் குறிப்பிடலாம். ஆனால் பாமரர்கள் மறுமையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இம்மையை மட்டுமே அவர்கள் குறியாக வைத்திருக்கிறார்கள். இம்மை யைப் படைத்த இறைவனுக்கு மறுமையைப் படைப்பது சர்வ சாதரண காரியம் என்பதை அவர்கள் உணரத் தவறி விடுகிறார்கள்.

இப்படி வெளித் தோற்றத்தைப் பற்றியும் உட்பொரு ளைப் பற்றியும் பர்வானாவுக்குக் கூறிக் கொண்டிருந்த மவ்லானா ரூமி தமக்கேயுரித்தான தலைப்புக்குத் திரும்பினார் கள். இப்போது அவர்களின் பேச்சில் உயிரோட்டம் தெரிந்தது. வழக்கப்படி அவர்கள் பேச்சு மெய்ஞ்ஞானத்தைச் சுற்றி வட்டமிட்டது.

இதோ மவ்லானா ரூமியின் உள்ளம் தெளிவாகப் பேசுகி றது:

''இம்மையை மட்டும் பார்க்கிறவர்கள் பாமரர்கள். மறு மையைப் பார்த்து முன்னேறுகிறவர்கள் ஞானிகள். இந்த இரு சாராருக்கும் அப்பால் மற்றொரு சாரார் இருக்கிறார்கள். இவர்கள் இம்மையையும் பொருட்படுத்துவதில்லை; மறுமை யையும் பொருட்படுத்துவதில்லை. இம்மைக்கும் மறுமைக் கும் மூலமான ஒன்றை அவர்களின் பார்வை துளைத்துக் கொண்டிருக்கிறது. உலக வாழ்வு எங்கிருந்து எப்படி ஆரம்பித் தது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது எப்படி முடியப் போகிறது என்பதும் அவர்களுக்குத் தெரிந்ததுதான். இம்மையின் முடிவு மறுமையாகும். இந்த முடிவைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஏனெனில் ஒரு பொருளின் ஆரம்பத்திலேயே அதன் முடிவைத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள்.



''இவர்கள் மக்கட் திரளில் மிகக் குறைவு என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. இவர்கள் இறைவனின் பேரன் புக்கு உரியவர்கள். இறையறிவைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதி வாய்ந்தவர்கள்.

இந்த உலகத்தை மனிதனின் முயற்சியே சிறப்பாக்கு கிறது. அவனுடைய செயல் திறன் எங்கும் பிரதி பலிக்கிறது. மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக் கும் ஆற்றல் இப்படி வெளிப்படுகிறது. மனிதனின் முயற்சியைத் துறந்துவிட்டால், இந்த உலகம் தேங்கி நிற்க ஆரம்பித்து விடும்.

**— மவ்லானா ரூமி.**

# 'ஸூஃபி' எனப்படும் ஞானி

இறையறிவில் தேர்ச்சியும் செயல் முறையில் திறமையும் வாய்ந்த அறிஞர்களையே நாம் மெய்ஞ்ஞானிகள் என்று குறிப்பிடுகிறோம். இவர்களுக்கு அரபி மொழியில் 'ஸூஃபி' என்று பெயர். அரசியலை விட்டுத் தனித்து நின்று இறைத் தியானத்தில் பேரின்பம் கண்ட அவர்கள் முற்றிலும் புதியதொரு கோணத்திலிருந்து உலகத்தைப் பார்த்தார்கள். அவர்களின் சிந்தனை, செயல், உடை முதலிய அத்தனையும் மாறுபடுகின்றன. திருக்குர்ஆனின் வசனங்களுக்கும் பெருமானாரின் பொன்மொழிகளுக்கும் அவர்கள் கொடுக்கும் விரிவுரை மற்றவர்களின் சிந்தனையைத் தூண்டக் கூடியவை.

அவர்களின் சிந்தனை எத்தகையது. அது எப்படி அவர்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது என்பன போன்ற பிரச்சினைகளை மவ்லானா ரூமி இங்கு ஆராய்கிறார்கள். 'மஸ்னவீ' எனும் பெருங் காவியத்திற்கு இது ஒரு முன்னுரை போன்றதுதான் என்றாலும், இங்கு அவர்கள் தம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினை ஞான மார்க்கத்திற்கே அடிப்படையான ஒன்று.

நீங்களே கேளுங்கள்; இதோ மவ்லானா ரூமி பேசுகிறார்கள்:

மெய்ஞ்ஞானிகளின் குணங்களில் முக்கியமானது நம்பிக்கை. தெளிவான கண்ணோட்டமும் குழப்பமில்லாத சிந்தனையும் அவர்களின் பிறப்புரிமைகள். முதலில் அவர்களின் நெஞ்சத்தில் சிந்தனை தோன்றுகிறது. அது உலகையும் அதிலுள்ள கோடானு கோடிப் பொருள்களையும் விளக்குகிறது. இறைவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுகிறது. பிறகு அந்தச் சிந்தனை உறுதி பெறுகிறது. இந்தக் கட்டத்தில் அறிவு உருவெடுக்கிறது. அப்புறம் தீர்க்கக்



கண்ணோட்டம் ஏற்படுகிறது. இதிலிருந்து அசைக்க முடியாத நம்பிக்கை உருப் பெறுகிறது!

இத்தகைய நம்பிக்கை இல்லாதவர்களை ஞானிகள் என்று சொல்ல முடியாது. அவர்கள் எத்தனை ஆயிரம் நூல்களைப் படித்திருந்தாலும், ஆத்மீகத் துறையில் அவர்களின் சிந்தனை இன்னும் வளரவில்லை என்பதே பொருள்.

மெய்ஞ்ஞானிகளின் சிந்தனை மற்றவர்களின் சிந்தனைக்கு முற்றிலும் மாறுபட்டது. அவர்களுக்குத் தோன்றும் சிந்தனை உயர்ந்த தத்துவங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது. எனவே அவர்கள் கண்ணால் பார்க்க முடியாத உண்மைகளை எல்லாம் கண்கூடாகக் கண்டதுபோல் நம்புகிறார்கள். இதனால் அவர்களின் மனப்பரப்பில் குழப்பத்திற்கே இடமில்லாமற் போய்விடுகிறது. இந்தச் சிந்தனை எவ்வளவுக் கெவ்வளவு வளர்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தீர்மானம் ஏற்படுகிறது; குழப்பம் தணிகிறது.

இதுபோன்ற நம்பிக்கைதான் அபூபக்ர் (ரலி) அவர்களின் நெஞ்சத்தில் நிலைத்திருந்தது. அந்த நம்பிக்கையின் துணைகொண்டு அவர்கள் எண்ணற்ற எதிர்ப்புகளைச் சமாளித்தார்கள். குறுக்கிட்ட தடைகள் அனைத்தையும் அந்த நம்பிக்கை தகர்த்தெறிந்தது; மக்களின் பாராட்டை விட இறைவனின் பாராட்டு சிறந்தது என்பதை விளக்கிற்று. அகிலமே எதிர்த்து நின்றாலும் அசையாத நம்பிக்கையுள்ளவர்களுக்கு அது துரும்புக்கு நிகரானது என்ற உண்மைக்கு அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கை தெளிவாக ஆதாரம் கொடுக்கிறது.

இந்த நம்பிக்கை வளரக் கூடியது; தேங்கி நிற்கக் கூடியதல்ல. இந்த நம்பிக்கை ஒரே ஒரு தடவை ஏற்பட்டு விட்டால் போதும். அப்புறம் தினம் வளர்ந்து கொண்டிருக்கும்.

இந்த நம்பிக்கை அவர்களுக்கு எப்படி ஏற்படுகிறது? இது தானாகவே ஏற்படுகிறது என்று சொல்ல முடியாது. இந்த நம்பிக்கையை மெய்ஞ்ஞானிகளுக்கு ஏற்படுத்துவது சிந்தனைதான் என்றாலும், பாமரர்களில் அனேகர் சிந்தனை

யின் சிறப்பை இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்றே நான் நினைக்கிறேன். தெளிவான சிந்தனையற்றவர்களுக்கு இத்தகைய நம்பிக்கை என்றைக்கும் ஏற்பட முடியாது.

இதனால்தான் இஸ்லாத்தில் சிந்தனை பாராட்டப்படு கிறது. அதற்குக் கிடைக்கும் ஆதரவு மகத்தானது.

சிந்தனையின் சிறப்பை நான்தானா உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்? அதன் பெருமைக்கு ஆதாரம் தேவையில்லை; அதிலிருந்து உருவாகும் நன்மைக்கு விளக்கம் தேவை யில்லை. மெய்ஞ்ஞானிகளுக்குச் சிந்தனை முக்கியமானதாக இருந்தாலும், அது அவர்களுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. மனிதர்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்படப் பிறந்தவர் களே. சிந்திக்கும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

ஆனால் இந்த உரிமையை முறைப்படி பயன்படுத்துகிற வர்கள் மக்கட் திரளில் மிகக் குறைவு என்பதையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவர்கள் சிந்தனையின் சிறப்பை உணர்ந்திருந்தாலும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக அவர்கள் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுவதில்லை.

எனவே அவர்களுக்கு எதிலும் நம்பிக்கை கிடையாது. நல்ல மனதோடு எதையும் அவர்கள் நம்புவதில்லை. நாளுக்கு நாள் அவர்களின் நம்பிக்கை வளர வேண்டியிருக்க, நாளுக்கு நாள் அவர்களின் குழப்பம் அதிகப்படுகிறது; சந்தேகம் மிகைப்படுகிறது. அவர்களின் உள்ளத்தில் சிந்தனைக்குரிய இடத்தை தப்பான எண்ணமும் தவறான கண்ணோட்டமும் நிரப்பிக் கொண்டிருக்கின்றன. இதனால் அவர்களின் மனோ வியாதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. சிந்தனையற்றவர்களின் மன நிலை முழு ஆரோக்கியத்துடன் இருக்க முடியாது.

இவர்களைத்தான் இறைவன் திருக்குர்ஆனில் இப்படிக் குறிப்பிடுகிறான்:

"அவர்களின் உள்ளங்களில் வியாதி இருக்கிறது. அவர்க ளின் வியாதியை இறைவன் அதிகப்படுத்திவிட்டான்.



இறைவன் யாரையும் கெடுப்பதில்லை. மக்கள் மீது அவனுக்கு மாறாத அன்புண்டு. இதனை உணராத மக்கள் தம்மைத் தாமே கெடுத்துக் கொள்கிறார்கள்; தமக்கே தெரியா மல் தம்முடைய மன வியாதியைப் பெருக்கிக் கொள்கிறார் கள்; அந்தப் பழியை இறைவன் மீது போடுகிறார்கள். முறையான சிந்தனையில்லாத காரணத்தினால் அவர்கள் ஒவ்வொரு நாளும் தீயவழியில் முன்னேறிக் கொண்டிருக்கி றார்கள்.

இவ்வளவுக்கும் இறைவன் மனிதனுக்கு வழிகாட்டிக் கொண்டுதான் இருக்கிறான். மனிதனின் முன்னேற்றத்திற்கு அவன் வகுத்துக் கொடுத்திருக்கும் வழிகள் மிகச் சிறந்தவை. திருக்குர்ஆனில் சிந்தனையின் சிறப்புக்கு விளக்கம் கொடுத்தி ருக்கும் இறைவன் எப்படிச் சிந்தனை செய்ய வேண்டும் என்பதை மனிதனுக்கு இப்படிக் கற்றுக் கொடுக்கிறான்.

"ஒட்டகத்தை நாம் எப்படிப் படைத்தோம், மலைகளை நாம் எப்படி நிலைப்படுத்தினோம், மண் தரையை எப்படி விரித்து வைத்தோம் என்று அவன் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?"

இதோ மனிதனைப் பார்த்து இறைவன் கூறுகிறான்:

"எனவே சிந்தனை செய். நீதான் சிந்தனை செய்ய வேண்டியவன்!"

சிந்தனை என்பது மனிதனின் தனிச் சொத்து. இதில் வேறு எந்தப் படைப்புக்கும் பங்கு கிடையாது; பங்கு பெறவும் முடியாது. எனவே மனிதன்தான் சிந்திக்க வேண் டும். அவனுக்குத்தான் உரிமையுண்டு. இது உரிமை மட்டு மல்ல, கடமையுமாகும். இந்தக் கடமை மனிதனைத் தவிர்த்து வேறு எந்தப் படைப்புக்கும் கிடையாது. இதில் அவன் குறை வைத்தால், ஏற்படும் விளைவுகளுக்கு அவனே பொறுப்பாளி.

மனிதன் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அது அவனுக்கே உரித்தான வழி.

ஒரு மனிதன் இப்படிச் சிந்தனை செய்யவில்லை என்றால் அவன் மனித இனத்துக்கே அவமானத்தைத் தேடித் தருகிறான் என்பதே பொருள்.

... இப்படிக் கூறிக் கொண்டிருந்த மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி, தம் கருத்துக்கு முத்தாய்ப்பு வைத்தார்கள்;

இத்தகைய சிந்தனையினால்தான் மெய்ஞ்ஞானிகள் உயர்ந்தார்கள்; அவர்களின் நம்பிக்கையும் செயலும் சிறந்தன; அவர்களின் கருத்துக்கள் அகிலத்தையே ஆட்டிப் படைத்தன.

இந்தச் சிந்தனை வலிமை மிக்கது; அதன் ஆற்றல் வரம்புக்கு அப்பாற்பட்டது. அது யாரையும் திருத்தலாம்.

இதுபோன்ற தூய சிந்தனையினால் ஒரு திருடன், மக்களின் உடைமைகளைப் பாதுகாக்கக் கூடிய அதிகாரியாக மாறலாம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. திருடனாக இருந்த ஒருவன் சிந்தனையின் தூண்டுதலால் அரசாங்க அதிகாரியாக மாறும்போது, அவனுடைய செயல்கள் பாராட்டுக்குரியவையாக மாறிவிடும்.

திருட்டுத் தொழிலுக்கென்று அவன் ஏற்கனவே கண்டுபிடித்து வைத்திருந்த தந்திரங்கள், சூழ்ச்சிகள் அத்தனையும் இப்போது அவனுக்குப் பெரிதும் துணை செய்யும். அவற்றை வைத்தே அவன் நாட்டிலுள்ள திருடர்களைக் கண்டுபிடிக்கலாம். அவனை வேறு எந்தத் திருடனாலும் ஏமாற்ற முடியாது. ஏனெனில் அவனே ஒரு காலத்தில் திருட்டுத் தொழிலில் தலைசிறந்து விளங்கியவன்தான். திருடனின் கண்ணோட்டம் திருடனுக்குத்தான் தெரியும். ஒரு திருடனை மற்றொரு திருடனால் ஏமாற்றி விடமுடியாது.

இப்படித் தீமைகளில் சிக்கித் தவித்து அனுபவம் பெற்ற ஒருவன் மெய்ஞ்ஞானியாக மாறும்போது அவனை நம்மால் இழிவுக் கண்கொண்டு பார்க்க முடியாது. அவனுடைய கடந்த காலத்தை வைத்து நிகழ் காலத்திற்குத் தீர்ப்பு வழங்க முடியாது. எனவே அவன் பாராட்டுக்குரியவன், பின்பற்றப்படுவதற்குத் தகுதியுள்ளவன். அவனை நம்மால் குறைத்து



எடைபோட முடியாது. சீர்திருத்தவாதிகளின் பட்டியலில் அவனுக்கு முதலிடமுண்டு.

கடந்த காலத்தில் அவன் எப்படி வாழ்ந்து வந்திருந்தாலும், இப்போது அவன் முற்றும் புதியதொரு திசைக்குத் திரும்பிவிட்டான். இறைவனை நினைத்தும் பார்க்காத அவன், இறைச் சிந்தனையில் இன்பம் காணத் துவங்கிவிட்டான். அவனுடைய மனப்பரப்பில் படிந்திருந்த ஆழமான கறையை அந்தச் சிந்தனை அழித்து விட்டது. குழப்பத்திலும் சூழ்ச்சியிலும் வாழ்ந்த அவன் இப்போது அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் ஆழமான ஞானத்துக்கும் தன்னை நிலைக்களனாக்கிக் கொண்டான்.

ஒரு காலத்தில் அவன் மிகப் பெரும் திருடனாக இருந்திருக்கலாம். அப்போது அவனை மக்கள் வெறுத்தார்கள்; அவன் செல்லும் வழியைப் பார்த்து முகம் சுளித்தார்கள். அவனது உள்ளம் இருளடைந்து கிடந்தது. அதில் மனோவியாதி வளர்ந்தது. அவனை மார்க்கம் எதிர்த்தது.

ஆனால் இப்போது அவன் மாறிவிட்டான். கடந்த காலம் ஏற்படுத்திய மனக் கறையை அவன் கட்டோடு மாற்றிவிட்டான். அவனது மனதில் ஒளிவிட்ட சிந்தனை, சூழ்ந்திருந்த இருளை அடித்து விரட்டிவிட்டது. இறைவனை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்த அவன் இப்போது இறைவனைப் பார்த்து முன்னேறிக் கொண்டிருக்கிறான். ஏற்கனவே வெறுத்தவர்கள் இப்போது அவனை மதிக்க வேண்டி ஏற்படுகிறது; முகம் சுளித்தவர்கள் முகம் திருப்ப வேண்டி ஏற்படுகிறது. ஏனெனில் இப்போது... அவன் உள்ளத்தில் சிந்தனையொளி ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அது அவனை மெய்ஞ்ஞானிகளின் படித்தரத்திற்கு உயர்த்துகிறது.

''எனவே அவனை முழு மனிதன் என்றும் சொல்லலாம்; அகில மக்களுக்கே தலைவன் என்றும் குறிப்பிடலாம்.''

காதலியை நெருங்கியிருக்கும்போது காதலின் உள்ளம் ஒருமுகப்படுகிறது. அப்போது வேறு எந்த எண்ணமும் அதில் தோன்றுவதில்லை. இது போலவே, ஞானிகளை ஒருவன் நெருங்கும்போது அவனுடைய உள்ளம் இறைவன் பக்கம் ஒருமுகப்படுகிறது. அவனுடைய தீய குணங்கள் எல்லாம் அப்போது மறைந்துபோய் விடுகின்றன.

**— ஜலாலுத்தீன் ரூமி**

படைப்புகள் மூன்றுவகை: முதலாவதாக வானவர்கள். இறைக் கட்டளைகளை முறைப்படி நிறைவேற்றுவது இவர்களின் வேலை. இரண்டாவதாக மிருகங்கள். இவற்றிற்குப் பகுத்தறிவு கிடையாது. மூன்றாவதாக மனிதர்கள். இவர்களுக்கு இறைக் கட்டளையும் உண்டு; மிருக உணர்வுகளும் உண்டு. எனவே ஒரு விதத்தில் இவர்கள் வானவர்களுக்கு நிகரானவர்கள்; மறுவிதத்தில் மிருகங்களைப் போன்றவர்கள்.

**— மவ்லானா ரூமி**